بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 7 | இதழ் 22

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்தூர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

துல்கஅதா 1 - ஹிஜ்ரி கமரி 1443 ★ இஹ்ஸான் 2 ஹிஜ்ரி ஷம்ஸி 1441
2 ஜுன் 2022


## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ الَّذِیۡنَ اٰمَنُوۡا وَالَّذِیۡنَ ھَادُوۡا وَالصّٰبِئُوۡنَ وَالنَّصٰرٰی مَنۡ اٰمَنَ بِاللّٰہِ وَالۡیَوۡمِ الۡاٰخِرِ وَعَمِلَ صَالِحًا فَلَا خَوۡفٌ عَلَیۡہِمۡ وَلَا ھُمۡ یَحۡزَنُوۡنَ ۝

**பொருள் :** நம்பிக்கை கொண்டவர்கள், யூதர்கள், ஸாபிகள், கிறித்தவர்கள் ஆகியவர்களுள் அல்லாஹ்விடத்தும், இறுதிநாளிடத்தும் உண்மையாகவே நம்பிக்கை கொண்டு நற்செயல் செய்கின்றவர்களுக்கு (வருங்காலத்தைப் பற்றிய) எந்தப் பயமும் ஏற்படாது. அவர்கள் (சென்ற காலத்தைப்பற்றி) கவலையடையவும் மாட்டார்கள்.

(அல்மாயிதா : 70)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## இறைவன் புறமிருந்து வருபவர்கள் மற்றும் அல்லாஹ்வின் நேசர்களை எதிர்ப்பதும் அவர்களுக்கு தொல்லைகள் கொடுப்பதும் ஒருபோதும் நல்ல கனிகளைத் தராது.

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து

இது பொதுவான சட்டம் ஆகும். அதாவது ஒரு நபர் ஒருவரை நேசிக்கும்போது அதுவும் தனது பிள்ளைகளை நேசிப்பதைப் போன்று நேசிக்கும்போது வேறொரு நபர் அவர் மரணித்துவிடவேண்டும் என்றோ அல்லது இதுபோன்று உள்ளத்தை புண்படுத்தும் பேச்சுக்களை பேசினால் அவருக்கு துன்பம் கொடுத்தால் அந்த நபர் மீது அவர் எப்படி மகிழ்ச்சி கொள்வார். தன்னுடைய பிள்ளைக்களுக்கெதிராக தீய துஆ செய்கின்ற நபர் மீது அல்லது தீய வார்த்தைகளை கூறும் நபர் மீது அவரால் எவ்வாறு நேசம் கொள்ள முடியும். அதேபோன்று அவ்லியாவுல்லாக்களும் (இறைநேசர்களும்) அத்ஃபாலுல்லாஹ் (அல்லாஹ்வின் சிறுவர்கள்) என்ற நிலையை கொண்டுள்ளனர்.ஏனென்றால் அவர்கள் பௌதீக பருவத்தின் சட்டையை கழற்றிவிட்டனர். மேலும் அல்லாஹ்வின் கருணையின் மடியில் வளர்கின்றனர். அவர்களின் உதவியாளனாகவும் அவர்களுக்காக தன்மானம் கொண்டவனாகவும் இருக்கின்றான். ஒரு நபர் (அவர் எவ்வளவுதான் தொழுகையாளியாகவும் நோன்பாளியாகவும் இருந்தாலும் சரி) அவ்லியாக்களான) அவர்களை எதிர்த்து அவர்களுக்கு துன்பம் கொடுப்பதில் மும்முரமாக இருந்தால் அப்போது அல்லாஹ்வின் தன்மானம் பொங்கி எழுந்துவிடுகின்றது. அவர்களுக்கு தொல்லைகள் கொடுக்கும் நபர்களுக்கெதிராக அவனது தன்மானம் பொங்கி எழுகின்றது. ஏனெனில் அந்த எதிரிகள் அவனது நேசர்களுக்கு துன்பம் கொடுக்க விரும்பினர். அந்நிலையில் அவர்களின் தொழுகையும் பயனளிக்காது.

நோன்பும் பயனளிக்காது. ஏனென்றால் தொழுகை மற்றும் நோன்பின் மூலம் எந்த இருப்பை மனிதன் மகிழ்ச்சியடைய செய்ய இருந்தானோ அதே இருப்பை தனது மற்ற செயல்களால் கோபப்படுத்திவிட்டான். இறைகோபம் நீங்காதவரை (இறைதிருப்திக்குரிய அந்த அந்தஸ்து எப்படி கிடைக்கும்?.அந்த அறிவிலி அந்த கோபத்தின் காரணிகளை அறியாதவராக இருக்கின்றார்.இன்னும் கூறப்போனால் தனது தொழுகை மற்றும் நோன்பின் மீது அவருக்கு ஒரு கர்வமும் பெருமையும் இருக்கின்றது. அதன் விளைவு என்னவாக

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் காண்க.

## நபிமொழி

**தூய செல்வத்திலிருந்து ஸதகா மற்றும் ஸகாத் வழங்குதல் :**

1410 : ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் :

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : எவரெல்லாம் தூய செல்வத்திலிருந்து ஒரு பேரீச்சம் பழத்திற்கு சமமாக ஸதகா கொடுத்தாரோ அல்லாஹ் தூய பொருட்களையே ஒப்புக் கொள்கிறான். பின்னர் அல்லாஹ் அந்த ஸதகாவை தனது வலக் கரத்தால் ஒப்புக் கொள்கிறான். மேலும் ஸதகா கொடுக்கக் கூடியவர்களுக்காக அதனை அதிகரித்து விடுகிறான். பின்னர் உங்களில் ஒருவர் தனது கன்றுக்குட்டியை வளர்ப்பது போன்று அதன் நன்மையை (ஸதகாவை) மலை போல் உயரும் அளவுக்கு வளர்த்து விடுவான்.

(சஹீஹுல் புகாரி தொகுதி 3, பாடம் ஸகாத், காதியான் வெளியீடு

* * * * * * *

## அல்லாஹ்வின் அருளால் நபி தூயவராக இருக்கின்றார். அவ்வாறிருக்க اِغۡفِرۡ لِیۡ என்று அவர் கூறுவதன் பொருள் என்ன?

رَبَّنَا اغۡفِرۡ لِیۡ وَلِوَالِدَیَّ وَلِلۡمُؤۡمِنِیۡنَ یَوۡمَ یَقُوۡمُ الۡحِسَابُ

( இப்ராஹீம் : 42 )

ஹஸ்ரத் ஸய்யிதுனா முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள் :

அல்லாஹ்வின் அருளால் நபி தூயவராக இருக்கின்றார். அவ்வாறிருக்க اِغۡفِرۡ لِیۡ என்று அவர் கூறுவதன் பொருள் என்ன? உண்மையில் இறை ஞானமற்ற மனிதனின் பார்வை எல்லைக் குட்பட்டதாக இருக்கின்றது. அவனது பார்வை மனிதன் வரையே செல்கின்றது. மேலும் மனிதனிடமே ஆறுதல் அடைகின்றது. ஆனால் இறைஞானியின் பார்வை மேலே செல்கிறது.மேலும் உயர்ந்ததாக இருக்கின்றது. அல்லாஹ்வுக்கு முன்னால் அடியாருக்கு என்ன அந்தஸ்து உள்ளது? என்பதை அவர் புரிந்து கொள்கிறார். சூரியனுக்கு முன்னால் ஒரு துகளுக்கு என்ன அந்தஸ்து உள்ளது. ஏனென்றால் இறுதியில் மனிதன் அவனது படைப்பே ஆவான்.அவனது வாழ்வும் அல்லாஹ்வால் வழங்கப்பட்டதே ஆகும்.நேர்வழியும் அவன் புறமிருந்தே வருகின்றது. காலிப் (என்ற கவிஞர்) மிக அருமையாக கூறியுள்ளார். உயிர் என்பதே அவனால் வழங்கப்பட்டது ஆகும். உண்மை என்னவென்றால் கடமை சரியாக நிறைவேற்றப்படவில்லை. நபி இறைஞானியாக இருக்கின்றார். அவர் தன்னை பார்க்கின்றார். மேலும் தான் செய்பவற்றை தான் செய்யவில்லை மாறாக இறைவனே செய்கின்றான் என்பதை அவர் அறிந்திருக்கின்றார். எனவே அவர் இவ்வாறு துஆ செய்கின்றார். அதாவது அல்லாஹ்வே எனது இருப்பை பெரும்பாலும் மறைவாகவே வைப்பாயாக.

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் காண்க.

## இந்த இதழில்


- திருக்குர்ஆன்
- நபிமொழி
- மல்ஃபூஸாத்
- தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை)
- குத்பா பேருரை
  ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை (29 ஏப்ரல் 2022)



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஓர் இன்பத்தையும், மகிழ்ச்சியையும் தன்னுள் கொண்டுள்ள துஆவே தொழுகையின் சாறும், ஆன்மாவும் ஆகும்.**

**ரமலானில் செய்யப்படும் நன்மைகளை ஆண்டு முழுவதும் தொடர்வதற்கு அறிவுரை.**

**பரஸ்பர உண்மையான அனுதாபம் இல்லாதவரை நமது ஜமாஅத்தில் பசுமை ஏற்படாது.**

**உலகத்தின் பொதுவான நிலைமைக்காகவும் இறைவழிக் கைதிகளுக்காகவும், பாகிஸ்தான் மற்றும் ஏனைய நாடுகளில் எதிர்ப்பை சகிக்கக்கூடிய அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யும்படி அறிவுரை.**

**மதிப்புக்குரிய அப்துல் பாகி அர்ஷத் சாஹிப் அவர்களின் நற்குறிப்பும், அன்னாரின் ஜனாஸா தொழுகையும்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 29 ஏப்ரல் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு ஷஹாதத் மாதம் **29ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ரமலான் வந்தது. மேலும், அதிலிருந்து பலன் பெறுவதற்கு முயற்சி செய்த அந்த அனைவர் மீதும் அருட்களை பொழிந்தவாறு சென்றுவிட்டது. இப்போது 2 நோன்புகள் பாக்கியுள்ளன. அல்லது சில இடங்களில் 3 நோன்புகள் பாக்கி இருக்கலாம். ஆனால், எவ்வாறு இருப்பினும் ரமலான் தனது நிறைவை எட்டுகிறது. ரமலான் நிறைவடைவதனால், நாம் நமது பல பொறுப்புகள் மற்றும் கடமைகளிலிருந்து விடுபட்டுவிடவில்லை என்பதை ஓர் அறிவாளியான உண்மையான முஃமின் எப்போதும் நினைவிற் கொள்கிறார். நினைவிற் கொள்ளவும் வேண்டும்.

இன்னும் கூறுவதாயின், ரமலான் அந்த கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கான உரிமையை செலுத்துவதற்கு ரமலான் தர்பிய்யத் வழங்கிச் சென்றுள்ளது. அந்த கடமைகளை நிறைவேற்றுவது மற்றும் நிரந்தரமாக நிறைவேற்றுவதற்கான வழியைக் கற்றுக் கொடுக்க வந்தது. மேலும், அவற்றில் முன்னேற்ற படித்தரங்களை அடிக்கோடிட்டுக் காட்டுவதற்காக வந்தது. மேலும், அதைக் கற்றுக் கொடுத்த வண்ணம் தனது நிறைவை எட்டுகிறது. ஃபர்ள் நோன்புகளுக்கான மாதம் நிறைவடைகிறதுதான். ஆனால், மற்ற கடமைகளின் தரத்தை மேலோங்கச் செய்ய மற்றும் அவற்றில் முன்னேறிக் கொண்டே செல்வதற்கான நேரம் ஆரம்பம் ஆகிறது. ரமலானுக்குப் பிறகு, நாம் நமது கடமைகள் மற்றும் உரிமைகளை செலுத்துவதற்கான தரங்களை எவ்வாறு நிலைபெறச் செய்ய வேண்டும் என்ற உண்மைத்துவத்தை மறந்துவிட்டால், பிறகு, நாம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியது போன்று நமது ரமலானைக் கழிக்கவில்லை.

ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஐந்து தொழுகைகள், ஒரு ஜுமுஆவிலிருந்து இன்னொரு ஜுமுஆ வரை, ஒரு ரமலானிலிருந்து மற்றொரு ரமலான் வரை, அவற்றிற்கு இடையில் ஏற்படக்கூடிய பாவங்களுக்கு பரிகாரமாக ஆகிவிடுகின்றன. ஆனால், பெரிய பாவங்களில் இருந்து தவிர்ந்திருப்பது நிபந்தனையாகும்.

(ஸஹீஹ் முஸ்லிம் கிதாப்- அத்தஹாரத், பாடம்-அஸ்ஸலாத்துல் கம்ஸ், ஹதீஸ்-552)

இங்கு இது தெளிவாகட்டும்! மனிதன் தனது சின்னச் சின்னப் பாவங்கள் மற்றும் பிழைகளை கவனத்தில் கொண்டு அவற்றிலிருந்து தப்பிப்பதற்கு முயற்சி செய்யவில்லை-யென்றால் மேலும் அவை ஏற்பட்டதனால், தவ்பா - இஸ்திஃக்ஃபார் செய்யவில்லை என்றால், பிறகு அவையே பெரும் பாவங்களாக மாறிவிடுகின்றன.

ஆக, இங்கு பொருள் என்னவென்றால், மனிதன் எந்நேரமும் அல்லாஹ்வின் மீதான அச்சத்தை உள்ளத்தில் கொள்ள வேண்டும். இஸ்திஃக்ஃபார் செய்து வர வேண்டும். இவ்வாறு இந்த விஷயங்களில் இருந்து தப்பியிருப்பான். ஆக, நாம் ஒரு ரமலானை மற்றொரு ரமலானுடன் நன்மைகளை செய்தவாறு, நமது கடமைகளை நிறைவேற்றியவாறு, இறைவணக்கம் மற்றும் மக்களுக்கான உரிமைகளை செலுத்தியவாறு, ஆண்டின் மற்ற மாதங்களைக் கழிக்கவில்லை என்றால், பிறகு நாம் ரமலானிலிருந்து முழுமையான முறையில் பலன் பெறவில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எல்லா விவகாரத்திலும் மிகவும் விரிவாக நமக்கு வழிகாட்டியுள்ளார்கள். இது நமது நற்பாக்கியம் ஆகும். மீண்டும் மீண்டும் தொடர்ச்சியாக நமக்கு இவ்வாறு அறிவுரை கூறியுள்ளார்கள்: உங்கள் இபாதத்துகளுக்கான உரிமையையும் செலுத்துங்கள். அடியார்களுக்கான உரிமையையும் செலுத்துங்கள்.

நமது வாழ்வைக் கழிப்பதற்கு நமக்கு ஒரு செயல் திட்டம் வகுத்துத் தந்துவிட்டார்கள். இந்த செயல் திட்டத்தை நாம் நமது வாழ்வின் அங்கமாக ஆக்கிக் கொண்டால், இந்த வழிமுறைப்படி நமது வாழ்வைக் கழிப்பதற்கு முயற்சி செய்தால், நிச்சயமாக நாம் நன்மையில் அதிகரிப்பதற்கான மற்றும் முன்னேற்றம் அடைவதற்கான அந்த வழிகளில், ஒரு ரமலானை இன்னொரு ரமலானோடு இணைக்கக்கூடிய அந்த வழிகளில், அதற்கு இடைப்பட்ட காலத்தில் செய்யப்பட்ட பிழைகள் மற்றும் பாவங்களிலிருந்து தவிர்ந்திருக்கக்கூடிய மற்றும் மன்னிக்கச் செய்யக்கூடிய அந்த வழிகளில் செல்லக்கூடியர்கள் ஆகிவிடுவோம்.

இந்த காலத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்த உண்மை அடியார் தான் நமக்கு இஸ்லாத்தின் உண்மையான போதனை படி நமது வாழ்வை கழிப்பதற்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்கள். மேலும், அல்லாஹ்வின் அருள்களுக்கு நிரந்தர வாரிசாக வேண்டும் என்றால், இவற்றின்படி அமல் செய்யுங்கள் என்று விரிவாகக் கூறுகிறார்கள்.

அன்னாருடைய அறிவுரைகளில் சில அறிவுரைகளை நான் இப்பொழுது எடுத்துரைப்பேன். ரமலானில் நமக்கு இறை வழிபாடுகளின் பால் கவனம் பிறக்கிறது. ஃபர்ளான தொழுகைகளையும், நஃபிலான தொழுகைகளையும் நாம் சிறப்பான முறையில் நிறைவேற்றுவற்கு முயற்சி செய்கின்றோம். ஆனால், தொழுகைகள் கடமையாக இருப்பது, எந்த ஒரு சிறப்பான மாதத்திற்கு அல்லது குறிப்பான நேரத்திற்கு மட்டும் உரியது இல்லை. மாறாக, ஒரு நாளில் ஐந்து தொழுகைகளை, அவற்றிற்காக நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில், ஆண்டின் 12 மாதங்களிலும் நிறைவேற்றுவது அவசியமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதுகுறித்து நம்பிக்கை கொண்டவர்களுக்கு மீண்டும் மீண்டும்

கவனமூட்டியுள்ளார்கள்.

அன்னார் (ஸல்) ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள் : தொழுகையை விடுவது மனிதனை நிராகரிப்பு மற்றும் இணைவைத்தலுக்கு அருகில் கொண்டு சென்று விடுகிறது.

(ஸஹீஹ் முஸ்லிம் - கிதாபுல் ஈமான், பயான் இத்லாஹ், இஸ்முல் குஃப்ர், அலா மன் தரக்கஸ் ஸலாத், ஹதீஸ் 247)

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள் : கியாமத் நாளன்று எல்லாவற்றுக்கும் முதலாவதாக அடியானிடம் கணக்கெடுக்கப்படுவது தொழுகையைப் பற்றியதாகும். இந்த கணக்கு சரியாக இருந்தால் அவர் வெற்றி பெற்று விட்டார்; ஈடேற்றம் அடைந்து விட்டார்.

(சுனன் திர்மிதி, அப்வாபுஸ் ஸலாத், ஹதீஸ்-413)

ஆக இது தான் தொழுகையின் முக்கியத்துவம் ஆகும். எந்த ஒரு குறிப்பிட்ட மாதத்திற்காக மட்டும் இது இருக்கவில்லை. மாறாக, ஒருநாளில் ஐந்து தொழுகைகளின் பால் கவனமூட்டப்பட்டுள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட (அலை) அவர்கள் தொழுகைகளின் முக்கியத்துவத்தை நமக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்கள். அறிவுரை கூறி இருக்கிறார்கள்.

மேலும், தொழுகை என்றால் என்ன? அதை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும்? நாம் எவ்வாறு தொழுகையிலிருந்து இன்பத்தைப் பெறலாம்? மேலும் அந்த இன்பத்தை பெறுவதற்கு எவ்வாறு முயற்சி செய்ய வேண்டும்? என்று நமக்கு தெளிவாக கூறிவிட்டார்கள். அல்லாஹ்வின் மீதான நேசத்தில் நம்மை அதிகரிக்கக் கூடிய தொழுகைகளாக அவை இருக்க வேண்டும். அதுவல்லாமல், ஒரு தேவை ஏற்படும் போது, ஏதாவது உலகப் பிரச்சினை முன்வரும்போது, தொழுகை விரிப்பை விரித்தோ அல்லது பள்ளிவாயிலுக்கு சென்றோ, சிறிது அழுது புலம்பி, மன்றாடி விட்டோம்; துஆக்களை செய்து விட்டோம்; அந்த பிரச்சனையை தீர்த்த பிறகு மறந்து விட்டோம் அல்லது ரமலான் மாதத்தில் மட்டும் தொழுகைகளின் பால் கவனம் செலுத்தி விட்டோம்; பிறகு மறந்துவிட்டோம்; அல்லது இருக்க வேண்டிய அளவு கவனம் இல்லை போன்ற நிலைகளில் நாம் இருக்கக் கூடாது. இவ்வாறு இருந்தால் நான் எடுத்து வைத்த அந்த நபிமொழியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது போன்று பிறகு தொழுகைகளும் பாவங்களை மன்னிக்க வைக்கக் கூடியவையாக இருப்பதில்லை; ஜுமுஆக்களும் இருப்பதில்லை; நோன்புகளும் இருப்பதில்லை. தொழுகை என்றால் என்ன என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இது ஒரு சிறப்பான துஆவாகும். ஆனால் மக்கள் இதை அரசர்களுக்கு செலுத்த வேண்டிய வரி ஆகக் கருதுகின்றனர். தொழ வேண்டிய நிர்பந்தம் என நினைக்கின்றனர். இறைவனுக்கு இந்த விஷயங்களின் தேவை என்ன இருக்கிறது என்பதைக் கூட இந்த அறிவீனர்கள் அறிவதில்லை. சுயமே தன்னிறைவு பெற்றவனாகத் திகழ்கின்ற அவனுக்கு மனிதன் துஆ, தஸ்ஃபீஹ் மற்றும் தஹ்லீலில் ஈடுபட வேண்டும் என்ற இவ்விஷயங்களின் தேவை என்ன இருக்கிறது? இன்னும் கூறப்போனால், இதில் சுயமே மனிதனுக்கு தான் பலன் இருக்கிறது. அவன் இந்த வழிமுறை மூலமாக தனது நோக்கத்தை அடைந்து விடுகின்றான். அன்னார் கூறுகிறார்கள்: இன்றைய நாட்களில் இறைவணக்கங்கள், தக்வா மற்றும் மார்க்கப் பற்று ஆகியவற்றின் மீது நேசம் இல்லை என்பதைப் பார்த்து எனக்கு மிகவும் வருத்தம் ஏற்படுகிறது. இவையோ நேசம் குறித்த விஷயங்கள் ஆகும்.

நேசம் இருந்தால், இந்தக் கடமைகள் சரியாக நிறைவேற்றப்படுகின்றன. இதற்கான காரணம் பொதுவாகக் காணப்படுகின்ற விஷத்தின் தாக்கத்தைக் கொண்ட சடங்காகும். இதன் காரணமாகவே அல்லாஹ்வின் மீதான அன்பு தணிந்து விடுகிறது. மனிதன் சம்பிரதாயங்களில் அதிகம் மூழ்கிவிட்டான். இறைவணக்கங்களில் எவ்வகையிலான இன்பம் கிடைக்க வேண்டுமோ அந்த இன்பம் கிடைப்பதில்லை. உலகில் அல்லாஹ் ஓர் இன்பத்தையும் சுவையையும் வைக்காத எந்த ஒரு பொருளும் இல்லை. ஒரு நோயாளி ஒரு சிறந்த சுவையுள்ள பொருளிலிருந்து இன்பத்தைப் பெற முடியாது. மேலும் அதனை அவர் முற்றிலும் கசப்பானதாக அல்லது இனிப்பற்றதாகக் கருதுவார். மருந்துகள் சாப்பிட்டு, அல்லது நோயின் காரணமாக நாக்கு மறத்து போய் விடுகிறது. எந்தப் பொருளின் சுவையும் தெரிவதில்லை. நோயாளிகள் சாப்பிட மறுத்துவிடுகிறார்கள். அல்லது சாப்பாட்டில் குறை கண்டுபிடிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அன்னார் (அலை) கூறுகிறார்கள் :

அவ்வாறே இறைவனை வணங்குவதில் எவர்களுக்கு இன்பமும் சுவையும் கிடைக்கவில்லையோ அவர்களும் நோயாளிகளைப் போன்றவர்கள். அவர்கள் தங்களுக்கு இருக்கின்ற நோயைப் பற்றி கவலைப்பட வேண்டும். ஏனென்றால், இப்போது நான் கூறியது போன்று, அல்லாஹ் ஏதாவதொரு இன்பத்தை வைக்காத எந்தவொரு பொருளும் உலகில் இல்லை. அல்லாஹ் மனித இனத்தை தன்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளான். அவ்வாறிருக்கும் போது அந்த இறை வணக்கத்தில் அவனுக்கு ஓர் இன்பமும் ஆனந்தமும் எப்படி இல்லாமற் போக முடியும்? அன்னார் (அலை) கூறுகிறார்கள்: இன்பமும் ஆனந்தமும் அதில் இருக்கத்தான் செய்கின்றது. இல்லாமல் இல்லை! ஆனால் அதிலிருந்து இன்பத்தைப் பெறக் கூடியவர்களும் எவராவது இருக்க வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான் :

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُونِ (51:57)

மனிதன் இறைவனை வணங்குவதற்காகவே படைக்கப்பட்டுள்ளான் எனும் போது, கண்டிப்பாக, இறைவணக்கத்தில் இன்பமும் மகிழ்ச்சியும் கூட உச்ச கட்ட அளவு வைக்கப்பட்டிருக்கும். எதற்காகப் படைக்கப்பட்டுள்ளானோ அதில் அந்த அளவு கண்டிப்பாக வைக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த விஷயத்தை அன்றாடம் நாம் பார்க்கின்ற விஷயங்களிலிருந்தும் அனுபவங்களிலிருந்தும் கூட நாம் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். அன்னார் (அலை) கூறுகிறார்கள் : உதாரணமாக பாருங்கள். தானியங்கள், உண்கின்ற மற்றும் குடிக்கின்ற பொருள்கள் அனைத்தும் மனிதனுக்காக உருவாகின்றன. சாப்பிடும் பொருள்கள் அனைத்தும் மனிதனுக்காக உருவாகின்றன. அதிலிருந்து அவன் ஓர் இன்பத்தையும் சுவையையும் பெறுவதில்லையா? இந்த சுவையையும், இன்பத்தையும், உணர்வையும் பெற்றுக் கொள்வதற்கு அவனது வாயில் நாவு இல்லையா? தாவரங்களோ, கனிமங்களோ, விலங்குகளோ அல்லது மனிதனோ அழகான விஷயங்களைப் பார்த்து அவன் இன்பம் அடைவதில்லையா? உள்ளத்தை மகிழ்விக்கின்ற இனிமையான குரலைக் கேட்டு அவர்களது காதுகள் இன்பத்தைப் பெறுவதில்லையா?

பிறகு இறை வணக்கங்களில் இன்பம் உள்ளது என்பதற்கு வேறு என்ன ஆதாரங்கள் தேவைப்படுகின்றன? எல்லாவற்றிலும் இன்பம் உள்ளது. மேலும், அதிலிருந்து மனிதன் இன்பம் அடைகிறான் எனும் போது, இறைவணக்கத்தில் ஏன் இருக்காது! அன்னார் (அலை) கூறுகிறார்கள்: நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். இறைவணக்கம் என்பது ஒரு சுமையோ அல்லது வரியோ அல்ல. அதிலும் ஓர் இன்பமும் ஆனந்தமும் உள்ளது. மேலும் இந்த இன்பம் உலகிலுள்ள எல்லா இன்பங்களை விடவும் உயர்ந்ததும் மேலானதுமாகும்.

அன்னார் (அலை) கூறுகிறார்கள் : ஒரு நோயாளி ஒரு சிறந்த நல்ல சுவையுள்ள உணவிலுள்ள இன்பத்தைப் பெற முடியாமல் இருப்பதைப் போன்று முற்றிலும் இறைவனை வணங்குவதில் இன்பத்தைப் பெறாத அந்த பேறிழந்த மனிதனும் இருக்கின்றான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்.160- 1984ஆம் ஆண்டு பதிப்பு)

அவனது நிலையும் நோயாளியின் நிலையைப் போன்றதே ஆகும். உங்கள் நோய்க்கு சிகிச்சை செய்து கொள்ளுங்கள். கவலை கொள்ளுங்கள். எனவே, இன்பத்தைப் பெறுவதற்கு எவ்வாறு முயற்சி செய்யலாம் என்ற இந்த மையக்கருத்தைப் புரிய வேண்டியுள்ளது. எதைப் பற்றி மனிதனுக்குப் புரிதலே இல்லையோ, தெரியவே இல்லையோ அதன் இன்பத்தை அவனால் எவ்வாறு பெற முடியும்? எவனது புலன்கள் அனைத்தும் மரணித்து விட்டனவோ, அவனால் எவ்வாறு ஏதாவதோர் அருளின் இன்பத்திலிருந்து பலன் பெற முடியும்? மகிழ்ச்சி அடைய முடியும்? மனிதன் பௌதீகத்தில் மூழ்கிவிட்டால், இந்த விஷயங்களைப் பற்றி அவனுக்குக் கவலையே இல்லை என்றால், பிறகு அவன் நோயாளி ஆகிவிட்டான். அதற்கான தீர்வுக்கும் அன்னார் வழியைக் கூறியுள்ளார்கள். அன்னார் (அலை) கூறுகிறார்கள் :

நான் பார்க்கிறேன்! மக்கள் தொழுகையில் கவனமற்றவர்களாகவும் சோம்பேறித்தனம் காட்டுபவர்களாகவும் இருப்பதற்குக் காரணம், தொழுகையில் அல்லாஹ் வைத்திருக்கின்ற அந்த இன்பம் மற்றும் ஆனந்தத்தைப் பற்றி அவர்களுக்கு தெரியவேயில்லை என்பதுதான். பிறகு நகரங்களிலும் கிராமங்களிலும் இன்னும் அதிகமாக சோம்பேறித்தனமும் கவனமின்மையும் ஏற்படுகின்றது. நூறில் ஐம்பதில் ஒரு பங்கு கூட, முழு ஆயத்தத்தோடும் உண்மையான நேசத்தோடும் தனது உண்மையான எஜமானனுக்கு முன் சிரம்பணிவதில்லை. பிறகு ஏன் சிரம்பணிவதில்லை? ஏன் இறைவணக்கம் செய்வதில்லை? என்ற கேள்வி எழுகிறது. அவர்களுக்கு அந்த இன்பத்தைப் பற்றித் தெரியவில்லை. மேலும், அவர்கள் ஒருபோதும் அந்த சுவையை சுவைத்ததில்லை. பிற மார்க்கங்களில் இதுபோன்ற கட்டளைகள் இல்லை.

சிலவேளை இவ்வாறும் நிகழ்கிறது. மக்கள் தமது பணிகளில் மூழ்கியிருக்கின்றனர். அப்போது பாங்கு சொல்பவர் பாங்கு சொல்லிவிடுகின்றார். பிறகு பாங்கு சொல்பவரின் பாங்கைக் கேட்பதற்குக் கூட அம்மக்கள் விரும்புவதில்லை. 'நாங்களோ எங்கள் வேலையில் மூழ்கியுள்ளோம். பாங்கு சொல்லி, சிரமத்தை ஏற்படுத்திவிட்டார்களே' என்று அவர்கள் கூறுகிறார்கள். ஒருவகையில் இதனால் அவர்களது உள்ளத்தில் துக்கம் ஏற்படுகிறது. பாங்கோசைக் கேட்டு அவர்களது உள்ளம் துன்புறுகிறது.

எனவே, நான் கூற விரும்புவதாவது, இறைவனிடம் மிகவும் உருக்கத்துடனும், எழுச்சியுடனும் இவ்வாறு துஆ கேட்க வேண்டும் : எவ்வாறு பழங்கள் மற்றும் பிற பொருட்களில் விதவிதமான இன்பங்களை வழங்கினாயோ அது போன்று தொழுகை மற்றும் இறைவணக்கத்தின் சுவையையும் எனக்கு ஒருமுறை சுவைக்க வைப்பாயாக! மேலும், ஒருமுறை மனிதனுக்கு இன்பம் வந்து விடும் போது, பிறகு அந்த சுவையைப் பற்றியும் தெரிந்து விடுகிறது. பிறகு, அவன் அதன் பால் கவனமும் செலுத்துகிறான்.

ஓர் அழகை ஒருவர் மிகவும் மகிழ்ச்சியுடன் பார்க்கிறார் எனில், அது நன்றாக நினைவில் இருக்கிறது. பிறகு ஒரு அசிங்கமான தோற்றத்தை, அருவருப்பானதை பார்க்கிறார் எனில் அதன் அனைத்து நிலைகளும் மொத்த உருவமாக அவருக்கு முன்னால் வந்து விடுகின்றன. எனினும், எந்தத் தொடர்பும் இல்லை என்றால், எதுவும் நினைவிருப்பதில்லை. இதே போன்று, தொழாத மக்களின் பார்வையில், தொழுகை ஒரு வரியாகும்.

தேவை இல்லாமல் காலையில் எழுந்து குளிரில் வுளூ செய்து, சுகமான உறக்கத்தை விட்டுவிட்டு, பலவிதமான ஒய்யாரங்களை இழந்து தொழ வேண்டி இருக்கிறதே என அவர் எண்ணுகிறார். அசல் விஷயம் என்னவென்றால், அவர் அதிலிருந்து விலகி இருக்கின்றார். தொழுகையில் இருக்கும் அந்த இன்பம் மற்றும் அமைதியை அவரால் புரிய முடியாது. அந்த தொழுகைக்கு நிகராக அவருக்கு ஓய்வில் அதிக இன்பம் கிடைக்கின்றது. உறக்கத்தில், தூங்குவதில் அதிக இன்பம் கிடைக்கின்றது. அன்னார் (அலை) கூறுகிறார்கள் : அவருக்குத் தெரிவதே இல்லை. பிறகு தொழுகையில் அவருக்கு இன்பம் எவ்வாறு ஏற்படும்?

நான் பார்க்கிறேன். ஒரு குடிகாரன் மற்றும் போதைப் பழக்கமுள்ள மனிதனுக்கு போதை வரவில்லை எனில் கோப்பை கோப்பையாக அருந்திக் கொண்டே செல்கின்றான். ஒருவகை போதை வரும் வரை (அவ்வாறு) செய்கிறான். அறிவாளியும் பெரிய மனிதருமாகிய ஒருவர் இதிலிருந்து பயன் பெற முடியும். அந்த குடிகாரனிடமிருந்து போதை பழக்கமுள்ளவன் போதை எடுத்துக் கொள்ளும் விஷயத்திலிருந்து என்ன பலன் பெற முடியும்? இவ்வாறு பலன் பெற முடியும். அதாவது, கலப்படமற்ற முஃமின் என்றால், தொழுகையை நிரந்தரமாகப் பேண வேண்டும். நிலையான தன்மையோடு தொழுகையை தொழுது கொண்டே செல்ல வேண்டும். அவருக்கு இன்பம் கிடைக்கும் வரை தொழுது கொண்டே இருக்க வேண்டும். எவ்வாறு குடிகாரனின் சிந்தனையில் ஓர் இன்பம் இருக்குமோ, எதைப் பெறுவது அவனது நோக்கமாக இருக்குமோ அவ்வாறே அவரது சிந்தனையும் அவரது முழு ஆற்றல்களும் தொழுகையில் இன்பத்தைப் பெற வேண்டும் என்பதில் இருக்க வேண்டும். துஆவும் செய்ய வேண்டும். முயற்சியும் செய்ய வேண்டும். பிறகு, ஒரு கலப்பற்ற தன்மை மற்றும் உத்வேகத்துடன் குறைந்தபட்சம் அந்த போதை பழக்கமுள்ளவனின் மன்றாடல் மற்றும் துடிப்பைப் போன்று ஒரு துஆ உருவாக வேண்டும். உள்ளத்தில் துஆவும் உருவாக வேண்டும். ஏற்கனவே கூறப்பட்டது போன்று, அல்லாஹ்விடம் இவ்வாறு துஆ செய்ய வேண்டும் :

அல்லாஹ்! அந்த இன்பம் கிடைப்பதற்கு எனக்கு மகிழ்ச்சியை வழங்குவாயாக! அன்னார் (அலை) கூறுகிறார்கள்: பிறகு, நான் கூறுகின்றேன். உண்மையாகவே கூறுகின்றேன். நிச்சயமாக, உறுதியாக அந்த இன்பம் அவருக்கு கிடைத்து விடும். இந்த வேதனையோடு துஆ செய்தால் பிறகு இன்பமும் கிடைத்துவிடும். பிறகு தொழுகின்றபோது தொழுகையினால் கிடைக்கக்கூடிய பலன்களைப் பெறுவதையும் கருத்தில் கொள்ள வேண்டும். நன்மைகள் செய்வதை கவனத்தில் வைத்திருக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான் :

اِنَّ الْحَسَنٰتِ يُذْهِبْنَ السَّيِّاٰتِ ( 11 : 115 )

அதாவது, நன்மைகள் தீமைகளை அழித்து விடுகின்றன. எனவே இந்த நன்மைகளையும் இன்பங்களையும் உள்ளத்தில் வைத்தவாறு உண்மையாளர்களுக்கும் நன்மை புரிந்தோருக்கும் கிடைத்த அந்த தொழுகை கிடைக்க வேண்டும் என்று துஆ செய்ய வேண்டும்.

நன்மைகள் அல்லது தொழுகை தீமைகளை அகற்றி விடுகின்றது என்று கூறப்பட்டிருக்கிறது. அல்லது இன்னோரிடத்தில் தொழுகை வெட்கக்கேடான செயல்களிலிருந்தும் தீமைகளிலிருந்தும் ஒருவரை காப்பாற்றுகின்றது என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் சில மக்கள் தொழுபவர்களாக இருந்தும் கூட தீமைகளைச் செய்வதை நாம் பார்க்கின்றோம். இதற்கான பதில் என்னவென்றால், அவர்கள் தொழுகிறார்கள் தான். ஆனால், தொழுகையின் ஆன்மாவுடனும் உண்மையுடனும் தொழுவதில்லை. அவர்கள் வெறுமனே ஒரு சடங்கு என்ற ரீதியில் அல்லது தங்களது பழக்கத்திற்கேற்ப குனிந்து நிமிர்கின்றனர். அவர்களது ஆன்மா மரணித்து விட்டது. அல்லாஹ் அவற்றிற்கு ஹஸனாத் என்று பெயர் வைக்கவில்லை.

இத்தகைய தொழுகைகள் ஹஸனாத் என்பதில் வராது. இங்கும் ஹஸனாத் என்ற சொல்லை வைத்துள்ளான். அஸ்ஸலாத் என்ற சொல்லை வைக்கவில்லை. இரண்டிற்கும் ஒரே பொருள் இருந்தும் கூட அஸ்ஸலாத் என்ற சொல்லை வைக்காமல் இருந்ததற்குக் காரணம், அதன் மூலம் தொழுகையின் சிறப்பு மற்றும் அதன் அழகையும் சுட்டிக் காட்ட வேண்டும்

என்பதற்காகவே ஆகும். அதாவது அதாவது உண்மையின் ஆன்மாவை தன்னகத்தே கொண்டிருக்கின்ற தொழுகை தீமைகளை அகற்றுகின்றது. மேலும் அருள்களின் தாக்கம் அதில் இருக்கின்றது. தொழுகை நிச்சயமாக, உறுதியாக தீமைகளை அகற்றுகின்றது. தொழுகை உட்கார்ந்து எழுவதின் பெயர் அல்ல. தொழுகையின் சத்தும் ஆன்மாவும், ஓர் இன்பத்தையும் மகிழ்ச்சியையும் தனக்குள் வைத்திருக்கின்ற அந்த துஆவாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்.162-164 வரை, 1984ஆம் ஆண்டு பதிப்பு)

எனவே, இந்த இன்பத்தையும் மகிழ்ச்சியையும் பெறுவதற்காகவும் அந்த நோயிலிருந்து வெளியே வருவதற்கும் கூட துஆ அவசியமானதாகும். நமது உலக ஆசைகளை நிறைவேற்றுவதற்காக மட்டுமே துஆ செய்யக்கூடாது. மாறாக, இதற்காகவும் துஆ செய்ய வேண்டும். எவ்வாறு நோயிலிருந்து குணம் அடைவதற்காக மனிதன் எல்லா திட்டங்களையும் மேற்கொள்கிறானோ, சிகிச்சையும் செய்து துஆவும் செய்கிறானோ அதே போன்று அதற்காகவும் துஆ செய்ய வேண்டும். பிறகு அன்னார் (அலை) அறிவுரை வழங்கியவாறு கூறுகிறார்கள் :

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுதது போன்று தொழுங்கள். ஆயினும், சுன்னத்தான திக்ர்களுக்குப் பிறகு, உங்களது தாய் மொழியிலும், உங்களது தேவைகள் மற்றும் நோக்கங்களை தாராளமாக முன்வையுங்கள். இறைவனிடம் கேளுங்கள். அதில் எந்தத் தவறும் இல்லை. இதனால் தொழுகை ஒருபோதும் வீணாகாது. இன்றைய காலத்தில் மக்கள் தொழுகையை சீர்கெடுத்து வைத்துள்ளார்கள். தொழுகை என்ன தொழுகிறார்கள்! விழுந்து எழுகிறார்கள். தொழுகையில் கோழி கொத்துவதைப் போன்று விரைவாக விழுந்து எழுந்து அமர்ந்து கொள்கிறார்கள். பிறகு அதற்கடுத்து துஆவுக்காக அமர்கிறார்கள். குறிப்பாக, நமது ஆசியாவில், இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இந்த வழக்கம் தான் இருக்கிறது. வேகவேகமாக தொழுதுவிட்டு, பிறகு கையை ஏந்தி துஆ செய்ய ஆரம்பித்து விடுவார்கள். அன்னார் (அலை) கூறுகிறார்கள் :

தொழுகைக்கான அசல் சத்து மற்றும் ஆன்மா துஆவே ஆகும். தொழுகையில் இருந்து வெளியே வந்த பிறகு துஆ செய்வதால் அந்த உண்மையான நோக்கம் எப்படி கிடைக்க முடியும்? இது எதைப் போன்றது என்றால், ஒரு நபர் அரசருடைய அரசவைக்கு செல்கின்றார். மேலும் அவருக்கு தன்னுடைய விண்ணப்பங்களை முன்னெடுத்து வைப்பதற்கான சந்தர்ப்பமும் இருக்கின்றது. ஆனால் அப்பொழுது அவர் எதுவும் கூறாமல், அந்த அவையை விட்டு வெளியே வந்த பிறகு, தனது கோரிக்கையை முன்வைத்தால், அதனால் அவருக்கு என்ன பலன் கிடைக்கும்? தொழுகையில் அழுது மன்றாடி துஆ கேட்காத அந்த மக்களின் நிலையும் இதுவே ஆகும். நீங்கள் என்ன துஆக்கள் செய்ய வேண்டுமோ, தொழுகையில் செய்து கொள்ளுங்கள். மேலும், துஆ செய்வதற்கான எல்லா ஒழுங்குமுறைகளையும் கருத்திற் கொள்ளுங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்.258-1984ஆம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு தொழுகைக்கான வழிமுறையை எவ்வாறு கற்றுக் கொடுத்துள்ளார்கள். ஓர் அறிவிப்பில் வருகிறது. ஒரு நபர் வந்தார்; தொழுதார். பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் வந்து சலாம் உரைத்தார். அன்னார் (ஸல்) கூறினார்கள் : செல்லுங்கள்!; மீண்டும் தொழுங்கள்! அன்னார் அந்த நபரைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பள்ளியில் அமர்ந்திருந்தார்கள். சபை கூடியிருந்தது. இவ்வாறு மூன்று முறை அந்த மனிதரை தொழச் செய்தார்கள். கடைசியில் அந்த மனிதர், ‘அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னால் இதைவிடச் சிறந்த முறையில் தொழமுடியாது. எனவே, எவ்வாறு தொழ வேண்டும் என்று தாங்களே எனக்குக் கற்றுக் கொடுங்கள்’ என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார்.

இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நீங்கள் தொழுவதற்காக நிற்கும்பொழுது தக்பீர் கூறுங்கள். பிறகு இயன்ற அளவு திருக்குர்ஆன் ஓதுங்கள். சூரா ஃபாத்திஹாவுடன் திருக்குர்ஆன் ஓதுங்கள். பிறகு முழுமையான மனநிறைவுடன் ருகூ செய்யுங்கள். சற்று குனிந்து எழுந்து விட்டோமென்று இருக்கக்கூடாது. முழுமையான மனநிறைவுடன் ருகூ செய்யுங்கள்.

பிறகு நேராக எழுந்து நில்லுங்கள். பிறகு முழு திருப்தியோடு ஸஜ்தா செய்யுங்கள். பிறகு ஸஜ்தாவிலிருந்து எழுந்து முழுமையாக அமருங்கள். சில மக்கள் ஸஜ்தா செய்வதற்காக மட்டும் இடையில் இரண்டு ஸஜ்தாக்களுக்கு இடையில் எழுகிறார்கள். பிறகு உடனடியாக ஸஜ்தாவுக்கு சென்று விடுகிறார்கள்.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: முழுமையாக அமருங்கள். அதற்கு பிறகு இரண்டாவது ஸஜ்தா செய்யுங்கள். இவ்வாறு முழு தொழுகையையும் நிறுத்தி நிதானமாக நிறைவேற்றுங்கள்.

(ஸஹீஹுல் புகாரி, கிதாபுல் அதான், ஹதீஸ் 793)

எவ்வாறு நிறுத்தி நிதானமாக தொழுவது என்று சில மக்கள் கேட்கிறார்கள். ஆக, இதுதான் நிறுத்தி நிதானமாக தொழுவதற்கான வழிமுறையாகும். அதாவது, தொழுகைக்கான எல்லா அசைவுகளுக்கும் நிறுத்தி நிதானமாக முழுநேரத்தையும் கொடுக்க வேண்டும். முழு நேரம் கொடுத்து பொறுமையாக தொழுங்கள்.

பிறகு, தொழுகையின் உண்மைத்துவத்தைப் புரிந்து அதை நிறைவேற்றுவதன் பால் கவனம் செலுத்திய பிறகு, ஒரு நம்பிக்கையாளருடைய பணி என்னவென்றால், திருக்குர்ஆனையும் ஓதவேண்டும்; மேலும், புரிய வேண்டும் மற்றும் அதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். எவ்வாறு பெரும்பாலும் ரமலானில் இதன் பால் கவனம் ஏற்படுகிறதோ அதே போன்று செய்ய வேண்டும். விளக்கவுரைகளிலும் ஆழ்ந்து கவனம் செலுத்துங்கள். ஒரு ரமலானை அடுத்த ரமலானுடன் இணைப்பதற்கு இதுவும் ஒரு வழிமுறையாகும். திருக்குர்ஆன் மீது கவனம் செலுத்த வேண்டும். திருக்குர்ஆன் ஓதுவது குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

நம்மிடம் திருக்குர்ஆன் இல்லாமல் இருந்திருந்தால், ஈமான் மற்றும் நன்னம்பிக்கைக்கு, ஹதீஸ்களின் இந்தத் தொகுப்புகள் மட்டுமே பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடியவையாக இருந்திருந்தால், நம்மால் பிற சமுதாயங்களுக்கு வெட்கத்தால் முகத்தைக் கூட காட்டியிருக்க முடியாது.

நான் குர்ஆன் என்ற வார்த்தையின் மீது கவனம் செலுத்திய போது, இந்த அருளுக்குரிய வார்த்தையில் ஒரு அருமையான முன்னறிவிப்பு உள்ளது என்பது எனக்கு வெளிப்பட்டது. அது என்னவென்றால், இந்தக் குர்ஆனே படிப்பதற்கு தகுதியான நூலாகும். மேலும் ஒரு காலத்தில் இன்னும் அதிகம் படிக்கத் தகுந்த நூலாக இருக்கும். அப்பொழுது மற்ற நூல்களும் அத்துடன் சேர்த்து படிக்கப்படும். அப்போது இஸ்லாத்தின் கண்ணியத்தைக் காப்பதற்காக, பொய்யை விரட்டுவதற்காக, இந்த ஒரு நூல் மட்டுமே படிப்பதற்கு தகுதி வாய்ந்ததாக இருக்கும். மற்ற நூல்கள் முற்றிலும் விட்டுவிட தகுந்தவையாக இருக்கும். புர்கான் என்பதற்கும் இதுவே பொருள் ஆகும். அதாவது இந்த ஒரு நூல் உண்மை மற்றும் பொய்யில் வித்தியாசத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். மேலும் எந்த ஹதீஸ் கிரந்தங்களும், வேறு எந்த நூலும் இந்த அளவு உயரிய தகுதியுடையதாக இருக்காது. எனவே இப்போது எல்லா நூல்களையும் விட்டுவிடுங்கள். மேலும் இரவு பகலாக இறைமறையையே ஓதுங்கள். எவர் திருக்குர்ஆனின் பக்கம் கவனம் செலுத்தவில்லையோ, மற்ற நூல்களின் பக்கமே இரவு பகலாக குனிந்து கிடக்கிறாரோ அவர் மிகவும் நம்பிக்கை அற்றவர் ஆவார்.

நமது ஜமாஅத் திருக்குர்ஆனின் பணியிலும் அதில் ஆழ்ந்து கவனம் செலுத்துவதிலும் உயிராலும் உள்ளத்தாலும் மூழ்கி விட வேண்டும். மேலும் ஹதீஸ்களின் பணிகளை விட்டுவிட வேண்டும். ஹதீஸ்களுக்கு முன்னுரிமை கொடுத்து பயிற்சி அளிப்பது போன்று திருக்குர்ஆனுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதில்லை என்பது மிகவும் வருத்தத்திற்குரிய இடமாகும். இப்போது திருக்குர்ஆன் எனும் ஆயுதத்தை கையில் எடுங்கள். வெற்றி உங்களுடையது. இந்த ஒளிக்கு முன்னால் எந்த இருளும் நிற்க முடியாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்.122-1984ஆம் ஆண்டு பதிப்பு)

பிறகு, நன்மைகளை நிலைபெறச் செய்வதற்காக அன்னார் (அலை) இவ்வாறு வழிகாட்டல் வழங்கினார்கள் :

எந்நிலையிலும் மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை வழங்குங்கள் இதை விளக்கியவாறு அன்னார் (அலை) கூறுகிறார்கள் : பாருங்கள்! இரு வகை மக்கள் உள்ளனர். ஒருசாரார் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டு உலகியல் பணிகளிலும் வியாபாரங்களிலும் மூழ்கி விடுகின்றனர். ஷைத்தான் அவர்களின் தலையில் ஏறிவிடுகிறான். நான் கூறுவதன் பொருள், வியாபாரம் செய்வது தடுக்கப்பட்டது என்பதல்ல. ஆம்! சஹாபிகள் வியாபாரமும் செய்தனர். ஆனால், அவர்கள் மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை வழங்கினார்கள்.

அவர்கள் இஸ்லாத்தை ஏற்றனர் என்றால், அவர்களின் உள்ளங்களை நன்நம்பிக்கையால் நிறைத்து விடக்கூடிய, இஸ்லாம் பற்றிய உண்மையான அறிவைப் பெற்றனர். இதனால் தான் எந்த ஒரு களத்திலும் ஷைத்தானின் தாக்குதல்களால் அவர்கள் திணறவில்லை. உண்மையை வெளிப்படுத்துவதை விட்டு எந்த விஷயத்தாலும் அவர்களைத் தடுக்க முடியவில்லை. நான் கூறுவதன் பொருள் இதுதான். அதாவது, எவர்கள் முற்றிலும் உலகின் அடிமைகளாக ஆகி விடுகிறார்களோ அவர்கள் ஒருவகையில் உலகை வணங்குபவர்களாக ஆகிவிடுகிறார்கள். இத்தகையவர்கள் மீது ஷைத்தான் தனது ஆதிக்கத்தை செலுத்தி தனது பிடிக்குள் எடுத்துக் கொள்கிறான்.

இரண்டாவது சாரார் மார்க்கத்தின் முன்னேற்றத்தைப் பற்றி கவலை கொள்கிறார்கள். இந்தக் குழு ஹிஸ்புல்லாஹ் (அல்லாஹ்வின் கூட்டம்) என்று அழைக்கப்படுகிறது. இது ஷைத்தானை, அவனது படையை வெற்றி காண்கிறது. வியாபாரத்தால் பொருள் வளர்கிறது. எனவே மார்க்கத்தைத் தேடுவது மற்றும் மார்க்கத்தில் முன்னேறுவதற்கான ஆசையை ஒரு வியாபாரம் என்று இறைவன் கூறியுள்ளான். அல்லாஹ் கூறுகிறான் : மார்க்கத்தைப் பெறுவதும் ஒரு வியாபாரம் ஆகும். ஆக அவன் கூறுகிறான்.

هَلْ اَدُلُّكُمْ عَلٰى تِجَارَةٍ تُنْجِيْكُمْ مِّنْ عَذَابٍ اَلِيْمٍ (61:11)

உங்களை வேதனைக்குரிய ஒரு தண்டனையிலிருந்து காப்பாற்றும் ஒரு வியாபாரத்தை நான் உங்களுக்கு கூறட்டுமா? கூறுகிறான் : எல்லாவற்றிலும் உயர்ந்த வியாபாரம் மார்க்கத்தினுடையதாகும். அது வேதனைக்குரிய தண்டனையிலிருந்து காப்பாற்றுகிறது. ஆக, நானும் இறைவனின் அதே வார்த்தையில் உங்களிடம் கூறுகிறேன்.

هَلْ اَدُلُّكُمْ عَلٰى تِجَارَةٍ تُنْجِيْكُمْ مِّنْ عَذَابٍ اَلِيْمٍ (61:11)

மார்க்கத்தின் முன்னேற்றம் மற்றும் ஆர்வத்தை குறைப்பவர்கள் குறித்து, ஷைத்தான் அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி விடுவானோ என்று நான் அஞ்சுகிறேன். ஒருபோதும் சோம்பேறிகள் ஆகக்கூடாது. சோம்பேறித்தனம் ஏற்படக்கூடாது. அன்னார் (அலை) கூறுகிறார்கள் : எனவே, இறைஞானத்தில் அதிகரிக்க கேள்வி கேட்க வேண்டும். கேள்வி கேட்பது தடுக்கப்படவில்லை. புரியவில்லை என்றால் கேளுங்கள். கண்டிப்பாக கேள்வி எழுப்ப வேண்டும். அன்னார் கூறுகிறார்கள் : செயல் முன்னேற்றம் பெறுவதற்கும் கேள்வி கேட்க வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்.193-194, 1984ஆம் ஆண்டு பதிப்பு)

செயல் முன்னேற்றத்திற்கு அவசியமானது. எனவே, எங்கு மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை வழங்குவதற்காக ஈமானில் உறுதிபெறுவது அவசியமோ அங்கு அறிவு மற்றும் செயல் ரீதியான முன்னேற்றமும் அவசியமாகும். மேலும், இதற்காக முயற்சியும் செய்ய வேண்டும்.

பிறகு, ரமலானின் அருள்களைத் தொடரச் செய்வதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்குக் கூறிய வழிமுறை உள்ளதே அது, பரஸ்பர தொடர்புகளில் உயரிய நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவதற்காக ரமலானில் நாம் மேற்கொண்ட முயற்சியைத் தொடர வேண்டும் என்பதாகும். மேலும் ஒருவர் மற்றவருடன் அன்பு மற்றும் சகோதரத்துவத்தை அதிகரிக்க வேண்டும். ஒருவர் மற்றவருடைய உரிமைகளை செலுத்த வேண்டும். அன்னார் (அலை) கூறுகிறார்கள் :

நமது ஜமாஅத் ஒருவர் மற்றவர் மீது உண்மையான அனுதாபம் காட்டாதவரை பசுமையாகாது. முழுமையான ஆற்றல் வழங்கப்பட்டவர் பலவீனமானவர் மீது அன்பு செலுத்த வேண்டும். நான் கேள்விப்படுகிறேன். ஒருவரின் தவறைப் பார்த்து அவருடன் நற்குணத்துடன் நடந்து கொள்ளாமல் வெறுப்புடன் நடந்து கொள்கிறார் எனில், அவருக்காக துஆ செய்யாமல் அவர் மீது பரிவு காட்டாமல், மென்மை மற்றும் நல்லொழுக்கத்துடன் அவருக்கு புரிய வைக்காமல், அவர் மீது காழ்ப்புணர்ச்சி கொள்வதில் அதிகரித்து விடுகிறார் எனில், மன்னித்து அனுதாபம் காட்டாமல் இருந்தால், இவ்வாறு சீர்கெட்டு முடிவு தீயதாகி விடுகிறது. இறைவனுக்கு இது ஏற்புடையதில்லை. ஒருவர் மற்றவர் மீது அனுதாபம் காட்டி திரையிடும்போதுதான் ஜமாஅத், ஜமாஅத் ஆக இருக்கும்.

இந்த நிலை உருவாகும்போது எல்லாரும் ஒரே இருப்பாகி ஒருவர் மற்றவருடைய உறவினர் ஆகிவிடுகிறார். தமது சொந்த சகோதரரை விட மேலாகக் கருதுகிறார். பரஸ்பர அன்பு சொந்த சகோதரரிடம் காட்டுவதை விட அதிகம் இருக்க வேண்டும். எப்படிப்பட்ட அனுதாபம் இருக்க வேண்டும் என்றால், உதாரணமாக ஒருவருக்கு மகன் இருக்கிறார் அவரிடம் ஒரு தவறு ஏற்பட்டால் அது மறைக்கப்படுகிறது. தனியாக அவருக்கு புரிய வைக்கப்படுகிறது. சொந்த சகோதரர் என்றால், ஒருவர் மற்றவருடைய குறைகளைத் திரையிடுகிறார். அவர் இந்த அநீதி இழைத்தார். இந்தப் பாவம் செய்தார் என்று ஒருபோதும் அதனை பரப்ப விரும்புவதில்லை. இறைவன் உங்களை சகோதரர்கள் ஆக்கியுள்ளான். பிறகு சகோதரரின் உரிமை இதுதானா? உலகியல் சகோதரர் சகோதரத்துவத்தை விடுவதில்லை. பிறகு, நீங்கள் ஏன் விடுகிறீர்கள்? அன்னார் (அலை) கூறுகிறார்கள் :

சிலநேரம் விலங்குகள், குரங்கு அல்லது நாயிடமிருந்து கூட மனிதன் கற்றுக் கொள்கிறான். இந்த வழிமுறை

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

அருளுக்குரியது. ஆக விஷயத்தில் பிளவு இருக்கக்கூடாது. இறைவன் சஹாபிகளுக்கும் அருள் மற்றும் சகோதரத்துவத்திற்கான இந்த வழியையே நினைவூட்டியுள்ளான். அவர்கள் தங்க மலையை செலவு செய்திருந்தாலும் கூட, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலம் அவர்களுக்குக் கிடைத்த அந்த சகோதரத்துவம் கிடைத்திருக்காது. இவ்வாறே இறைவன் இந்த இயக்கத்தை நிறுவியுள்ளான். மேலும், அதே போன்ற சகோதரத்துவத்தை அவன் இங்கே ஏற்படுத்துவான். இறைவனிடம் நான் பெரும் நம்பிக்கை வைத்துள்ளேன். அவன் என்னிடம் வாக்குறுதி அளித்துள்ளான் :

جَاعِلُ الَّذِيْنَ اتَّبَعُوْكَ فَوْقَ الَّذِيْنَ كَفَرُوْٓا اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ (3:56)

கியாமத் வரை நிராகரிப்பவர்கள் மீது மேலோங்கி இருக்கும் ஒரு ஜமாஅத்தை அல்லாஹ் உருவாக்குவான் என்பதை நான் நிச்சயமாக அறிகிறேன். ஆனால், இந்த நாள்கள் சோதனைக்குரிய நாள்களாகும். பலவீனமான நாட்களாகும். ஒவ்வொரு நபருக்கும் அவர் தன்னை சீர்திருத்திக் கொள்வதற்கும் தனது நிலையில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கும் அவை சந்தர்ப்பம் அளிக்கின்றன.

பாருங்கள்! ஒருவர் மற்றவரைப் பற்றி முறையிடுவது, மனதை புண்படுத்துவது, கடுஞ்சொற்களைப் பேசி பிறரது உள்ளத்திற்கு துயரத்தை ஏற்படுத்துவது மற்றும் பலவீனமானவர்களையும் எளியவர்களையும் இழிவாகக் கருதுவது ஆகியவை பெரும் பாவங்கள் ஆகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்.348-349, 1984ஆம் ஆண்டு பதிப்பு)

அன்னார் (அலை) கூறுகிறார்கள் :

நமது ஜமாஅத்திற்கு உடல் வலிமை பெற்றவர்கள், வீரர்கள் தேவையில்லை. நமக்கு உடல் வலிமை பெற்றவர்கள் தேவையில்லை. மாறாக ஒழுக்கத்தில் மாற்றங்களை ஏற்படுத்த முயற்சி செய்யக்கூடிய ஆற்றலைக் கொண்டிருப்பவர்கள் தான் தேவை. ஒரு மலையை ஓரிடத்திலிருந்து நகர்த்தும் வலிமை பெற்றவன் உண்மையான பலசாலி இல்லை. இல்லவே இல்லை! ஒழுக்கத்தை நல்லதாக மாற்றும் வலிமை பெற்றவரே உண்மையான வீரர் ஆவார். எனவே இதனை நினைவில் கொள்ளுங்கள். அனைத்து துணிவையும் ஆற்றலையும் ஒழுக்கத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதில் செலவு செய்யுங்கள். ஏனென்றால் இதுதான் உண்மையான ஆற்றலும், வலிமையும் ஆகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்.140- 1984ஆம் ஆண்டு பதிப்பு)

பரஸ்பர அன்பு, நேசம், ஒருவர் மற்றவருடைய உரிமையை செலுத்துதல், பணிவு மற்றும் எளிமையுடன் வாழ்வைக் கழித்தல் ஆகியவை தொடர்பாக அன்னார் கூறுகிறார்கள்: இறையச்சம் கொண்டவர்களுக்குரிய நிபந்தனை என்னவென்றால், அவர்கள் தமது வாழ்வை ஏழ்மையிலும், எளிமையிலும் கழிக்க வேண்டும். இது இறையச்சத்தின் ஒரு கிளையாகும். அதன் மூலமாக நாம் தகாத கோபத்தை எதிர்கொள்ள வேண்டும் மாபெரும் இறைஞானம் கொண்டவர்களுக்கும் சித்தீக்குகளுக்கும் இறுதியானதும் கடுமையானதுமான இறுதி நிலை கோபத்திலிருந்து தப்பிப்பதேயாகும். ஆணவம், கர்வம் போன்றவை கோபத்திலிருந்து தான் உருவாகின்றன.

இதனைப் போன்றே ஆணவம், கர்வத்தின் விளைவு கோபமே ஆகும். அதாவது கோபம் ஆணவத்தினால் வருகிறது. அல்லது கோபத்தினால் ஆணவமும் கர்வமும் உருவாகிறது. மனிதன் தனக்கு மற்றவர் மீது முதன்மை அளிக்கும்போதுதான் கோபம் வருகிறது. எனது ஜமாஅத்தினர்கள் தமக்குள் ஒருவர் மற்றவரை பெரியவர் சிறியவர் என்று கருதுவதை நான் விரும்புவதில்லை. அல்லது ஒருவர் மற்றவர் மீது கோபம் கொள்வது அல்லது இழிவின் பார்வையுடன் பார்ப்பது போன்றவவை விரும்புவதில்லை.

யார் பெரியவர்? யார் சிறியவர்? என்பதை இறைவன் அறிவான். இது ஒருவகையான ஏளனம் ஆகும். இதற்குள் இழிவு உள்ளது. இந்த ஏளனம் விதை போன்று வளர்ந்து அவனது அழிவிற்கு காரணமாக அமைந்து விடக்கூடாது என அச்சம் ஏற்படுகிறது. சில மனிதர்கள் பெரியவர்களை சந்திக்கும் போது மிகவும் கண்ணியத்துடன் நடந்து கொள்கின்றனர். ஆனால், வறியவரின் விஷயங்களை எளிமையாக கேட்பவர் தான் பெரியவர் ஆவார். அவருக்கு மனமகிழ்ச்சி அளிக்க வேண்டும். அவருடைய கூற்றிற்கு கண்ணியம் அளிக்க வேண்டும். அவருக்கு வருத்தம் ஏற்படும் வகையில் எரிச்சலூட்டக்கூடிய வகையில் எந்தவொரு வார்த்தையும் பேசக் கூடாது. குறிப்பாகப் பெரியவர்களும் பொறுப்பாளர்களும் இதை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது அவர்கள் தாம் பேசக்கூடிய மக்களிடம் மிகவும் அமைதியாக, அன்போடு, நேசத்தோடு பேச வேண்டும். அல்லாஹ் கூறுகிறான் :

وَلَا تَنَابَزُوْا بِالْاَلْقَابِ بِئْسَ الِاسْمُ الْفُسُوْقُ بَعْدَ الْاِيْمَانِ وَمَنْ لَّمْ يَتُبْ فَاُولٰٓئِكَ هُمُ الظّٰلِمُوْنَ (49:12)

நீங்கள் ஒருவர் மற்றவரை பட்டப்பெயர் சூட்டி அழைக்காதீர்கள். இந்த செயல் நெறி தவறியவர்களின் செயலாகும். எவர் ஒருவர் மற்றவரை இழிவுபடுத்துவாரோ அவருக்கு அதே போன்ற நிலைமை ஏற்படாத வரை மரணிக்க மாட்டார். உங்கள் சகோதரர்களை ஏளனமாகப் பார்க்காதீர்கள். ஒரே ஊற்றிலிருந்து நீர் அருந்தக் கூடியவர்கள் எனும்போது, எவருக்கு அதிக அளவு நீர் அருந்துவதற்கான நற்பேறு உள்ளது என்பதை யார் அறிவார்?

மதிப்பும் மரியாதையும் எவருக்கும் பௌதீகக் கோட்பாடுகளால் கிடைக்க முடியாது. இறைவனது பார்வையில் இறையச்சம் உடையவரே பெரியவர் ஆவார்.

اِنَّ اَكْرَمَكُمْ عِنْدَ اللّٰهِ اَتْقٰكُمْ اِنَّ اللّٰهَ عَلِيْمٌ خَبِيْرٌ (49:14)

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்.36, 1984ஆம் ஆண்டு பதிப்பு)

எனவே, ரமலானில் நீங்கள் உருவாக்கிய இறையச்சத்தின் எதிர்பார்ப்பு என்னவென்றால், பரஸ்பர தொடர்புகளையும் சிறந்ததிலும் சிறந்ததாக ஆக்க வேண்டும். ஒருவர் மற்றவருடனான விவகாரங்களிலும் ஒழுக்க மற்றும் நற்பண்புகளின் முன்மாதிரியைக் காட்ட வேண்டும். பிறகு, அன்னார் (அலை) கூறுகிறார்கள் :

இதனை பலமுறை நான் கூறிவிட்டேன். நீங்கள் பரஸ்பரம் உங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துங்கள். ஒருமைப்பாட்டுடன் செயல்படுங்கள். இறைவன் முஸ்லிம்களுக்கு இந்த போதனையைத்தான் வழங்கியுள்ளான். நீங்கள் ஒன்றுபட்டு இருங்கள். அவ்வாறில்லையென்றால், உங்களது ஆற்றல் குறைந்துவிடும். உங்களிடையே ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்பதற்காகவே தான் தொழுகையில் ஒருவர் மற்றவருடன் சேர்ந்து ஒன்றாக நிற்க வேண்டும் என்ற கட்டளை இருக்கின்றது. மின்சாரத்தைப் போன்று ஒருவரது நன்மை மற்றவரிடம் ஊடுருவும். கருத்து வேறுபாடு இருந்தால், ஒற்றுமை இல்லாமல் இருந்தால், பிறகு நீங்கள் பாக்கியமற்றவர்களாக ஆகி விடுவீர்கள். இன்றைய கால சூழ்நிலை காரணமாக, ஓர் இடைவெளி விடப்படுகிறது என்றால், இது தேவையின் காரணத்தினால் ஆகும். இது ஒரு நிரந்தர விஷயமாக ஆகிவிட்டதாக பிள்ளைகளோ அல்லது மற்றவர்களும் கூட நினைத்து விட வேண்டாம். மெல்ல மெல்ல நிலைமைகள் சீரடைகின்றன. இடைவெளிகளும் குறைகின்றன. இயல்பு நிலையும் திரும்பி விடும். இன்ஷா அல்லாஹ். அசல் விஷயம் இதுதான், பள்ளியில் வரிசை அமைக்கும் போது ஒருவர் மற்றவருடன் சேர்ந்து நிற்க வேண்டும். இந்த விஷயத்தை எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். குறைந்த பட்சம் ஜமாஅத்தான தொழுகைகள் தொடர்வதற்காக தேவையின் அடிப்படையில் ஒரு தற்காலிக ஏற்பாடு செய்யப்பட்டது. எனவே, இடைவெளி விடப்பட்டது. எவ்வாறு நிலைமைகள் சீர் அடைய, சீர் அடைய விரைவாக இயல்பு நிலை திரும்பி விடும் என்ற நம்பிக்கை உள்ளது. இன்ஷா அல்லாஹ். எவ்வாறு இருப்பினும் அன்னார் (அலை) அவர்கள் கூறுகிறார்கள் :

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் : பரஸ்பரம் அன்பு காட்டுங்கள். ஒருவர் மற்றவருக்காக மறைவான முறையில் துஆ செய்யுங்கள். இது மிக முக்கியமான விஷயம் ஆகும். ஒருவர் மற்றவருக்காக மறைவான முறையில் துஆ செய்யுங்கள். ஒருவர் உங்களிடம் துஆவிற்காக கூறினாலும் சரி! கூறாவிட்டாலும் சரி! நீங்கள் ஒருவரை அறிந்தாலும் சரி! அறியாவிட்டாலும் சரி! பொதுவாக ஜமாஅத் மக்கள் ஒருவர் மற்றவருக்காக அல்லது ஜமாஅத்துக்காக ஜமாஅத் அளவில் துஆ செய்தால் இது மிகப் பெரிய நன்மையாகும்.

அன்னார் (அலை) கூறுகிறார்கள் :

ஒரு நபர் மறைவான முறையில் மற்றவருக்காக துஆ செய்யும் போது வானவர் உனக்கும் அவ்வாறே ஆகட்டும் என்று கூறுகிறார். இது எவ்வளவு உயர்தரமான விஷயம்! மனிதனின் துஆ ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றாலும் வானவரின் துஆ ஏற்றுக் கொள்ளப்படுகிறதுதானே. நான் அறிவுரை கூறுகிறேன். பரஸ்பரம் கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள் என்பதைக் கூற விரும்புகிறேன். அன்னார் கூறுகிறார்கள் :

நான் இரண்டு விஷயங்களைத்தான் கொண்டு வந்துள்ளேன். ஒன்று, இறைவனின் ஏகத்துவத்தை கடைபிடியுங்கள். இரண்டாவது, உங்களுக்கு மத்தியில் அன்பு மற்றும் அனுதாபத்தை காட்டுங்கள். மற்றவர்களுக்கு அற்புதமாகத் திகழ்கின்ற அந்த முன்மாதிரியைக் காட்டுங்கள். இந்த ஆதாரம் தான் சஹாபிகளிடம் உருவாகியிருந்தது.

(3:104) كُنْتُمْ اَعْدَآءً فَاَلَّفَ بَيْنَ قُلُوْبِكُمْ

நீங்கள் ஒருவருக்கொருவர் பகைவர்களாக இருந்தீர்கள். அவன் உங்களது உள்ளங்களைப் பரஸ்பரம் இணைத்து விட்டான்.

நினைவிற் கொள்ளுங்கள்! இவ்வாறு அன்பு காட்டுவது ஓர் அற்புதமாகும். நினைவிற் கொள்ளுங்கள்! உங்களில் ஒவ்வொருவரும் தமக்காக விரும்புவதையே தமது சகோதரருக்காகவும் விரும்பாதவரை, அவர் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர் அல்ல. அந்த நபர் துன்பத்திலும் துயரத்திலும் இருக்கின்றார். அவரது முடிவு நல்லதாக இருக்காது.

(மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்.48- 1984ஆம் ஆண்டு பதிப்பு)

பிறகு, இறைவனுடன் அன்பு செலுத்துவதன் பால் கவனமூட்டிய வண்ணம் அன்னார் (அலை) கூறுகிறார்கள் : இறைவனோடு அன்பு கொள்வதன் பொருள் என்ன? தன்னுடைய பெற்றோர்கள், மனைவி, குழந்தைகள் மற்றும் தனது ஆன்மா, சுருக்கமாக எல்லாவற்றிலும் இறைவனின் விருப்பத்தை முன்னிலைப்படுத்த வேண்டும் என்பதுதான் அது. திருக்குர்ஆனில் வருகின்றது :

فَاذْكُرُوا اللّٰهَ كَذِكْرِكُمْ اٰبَآءَكُمْ اَوْ اَشَدَّ ذِكْرًا (2:201)

அதாவது, நீங்கள் உங்களுடைய மூதாதையர்களை நினைவு கூருவது போல் இறைவனை நினைவு கூருங்கள். இன்னும் கூறுவதாயின், அதைவிட அதிகமான மற்றும் உயர்ந்த தரத்தில் உள்ள அன்பால் நினைவு கூருங்கள். அன்னார் (அலை) கூறுகிறார்கள்: உண்மையான ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்காக இறைவன் மீதான அன்பிலிருந்து முழுமையான பங்கு பெறுவது அவசியமாகும். செயல் பகுதியில் முழுமை பெறாதவரை இந்த அன்பு நிரூபணமாகாது. செயல் ரீதியாகவும் அன்பு கொள்ள வேண்டும். வெளிப்படுத்த வேண்டும். வெறும் நாவினால் நிரூபணமாகாது. ஒருவர் கற்கண்டு என்று கூறிக் கொண்டே இருந்தால், அந்த இனிமை ஒருபோதும் வராது. அவரது வாய் இனித்து விடாது. சர்க்கரையின் பெயரை மட்டும் கூறினால், இனித்து விடுமா? இல்லை.

அல்லது நாவினால் ஒருவருக்கு நண்பராக இருப்பதாக உறுதி கூறிவிட்டு, துன்பம் வரும்போது, அவருக்கு உதவாமல், கை கொடுக்காமல் விலகி இருந்தால், அந்த நண்பர் உண்மையானவராக இருக்க முடியாது. இதைப்போன்றே வெறும் நாவினால் மட்டுமே, இறைவனுடைய ஏகத்துவத்திற்கு உறுதிகூறி, அவனுடன் அன்பு கொண்டுள்ளதாக நாவினால் மட்டும் உறுதிகூறினால், எந்த பயனும் இல்லை. மாறாக, இந்தப் பகுதி நாவின் ஒப்புதலுக்கு பகரமாக, செயல் ரீதியான பகுதியை அதிகமாக எதிர்பார்க்கிறது.

இதன் அர்த்தம் நாவின் உறுதி கூறுதல் ஒன்றுமற்றது என்பதல்ல. இல்லை, நான் கூற வருவதாவது, நாவின் ஒப்புதலுடன் செயலின் சான்றொப்பமும் அவசியமாகும். ஆகையால் இறைவழியில் உங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணிப்பது அவசியம். மேலும் இதுவே இஸ்லாம் ஆகும். இந்த நோக்கத்திற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். எனவே இந்த நோக்கத்திற்காக இறைவன் பாய்ந்தோடச் செய்துள்ள இந்த நீரூற்றின் பால் வராதவர், நிச்சயமாக துர்பாக்கியசாலி ஆக இருக்கிறார்.

ஏதாவது பெற வேண்டும்; நோக்கத்தை அடைய வேண்டும் என்றால், உண்மையாகத் தேடுகின்றவர் இந்த நீரூற்றை நோக்கி முன்னேற வேண்டும். முன்னோக்கி அடியெடுத்து வைக்க வேண்டும். மேலும், ஓடும் இந்த நீர் ஊற்றின் கரையில் தனது வாயை வைக்க வேண்டும். இறைவன் முன்னிலையில் இறைவன் அல்லாதவை எனும் ஆடையை கழற்றி இறைவனுடைய சன்னிதியில் விழுந்து விடாத வரை, உலக கண்ணியம் சென்றாலும் சரி! துன்பங்கள் எனும் மலைகள் இடிந்து விழுந்தாலும் சரி! அப்போதும் இறைவனை விட மாட்டேன். இறைவனுடைய வழியில் எல்லா வகையான தியாகங்களையும் செய்ய ஆயத்தமாக இருப்பேன் என உறுதிமொழி எடுக்காத வரை, இது நிகழ முடியாது. ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் மகத்துவமான கலப்படமற்ற தன்மை இதுவாகவே இருந்தது. மகனை தியாகம் செய்வதற்காக ஆயத்தமாகி விட்டார்கள். பல இப்ராஹீம்களை உருவாக்குவதே இஸ்லாத்தின் நாட்டமாகும்.

இப்ராஹீம் (அலை) அவர்களுடைய சிறப்பாக, அவர் நன்றி உடையவராக இருந்தார் என்றே திருக்குர்ஆனில் இறைவன் கூறியுள்ளான். எனவே உங்களில் ஒவ்வொருவரும் இப்ராஹிம் ஆக முயற்சி செய்ய வேண்டும். நான் உண்மையாகவே கூறுகிறேன். நீங்கள் இறைநேசரை வணங்குபவராக ஆகாதீர்கள். இறைநேசராக ஆகுங்கள். பீர்மார்களை வணங்குபவராக ஆகாதீர்கள். பீர்மார்களாக ஆகுங்கள்.

நீங்கள் பீர் ஆகி இவ்வழிகளின் வாயிலாக வாருங்கள். (போலி) பீர்களைப் போன்று வெறுப்பும் ஆணவமும் உருவாக்கி விடக் கூடாது. மாறாக பணிவையும் தன்னடக்கத்தையும் உருவாக்குங்கள். நன்றி உணர்வை உருவாக்குங்கள். இதுவே இதன் பொருளாகும்.

இன்றைய காலத்து பீர்களைப் போன்று உலகத்தை வெளிப்படுத்துவது இதன் நோக்கம் அல்ல. அன்னார் கூறுகிறார்கள்: சந்தேகமின்றி அவை நெருக்கடியான வழிகள் ஆகும். நீங்கள் அந்த வழிகளின் வாயிலாக வாருங்கள். அவை நெருக்கடியான வழிகள்தான். ஆனால், இந்த வாயில் வாயிலாக நுழைந்த பிறகு இன்பமும் ஓய்வும் கிடைக்கிறது. ஆனால், இந்த வாயில் வழியாக மிகவும் லேசாக ஆகி நுழைவது அவசியமாகும். தலையில் பெரிய மூட்டை முடிச்சு இருக்கிறது என்றால், பிறகு சிரமம்தான். இதன் வழியாக நுழைய விரும்பினால் உலகின் மூட்டை முடிச்சுகளை வீசி எறியுங்கள். நம்முடைய ஜமாஅத் இறைவனை மகிழ்விக்க விரும்புகிறது என்றால், இதனை வீசி எறியட்டும். நினைவிற் கொள்ளுங்கள்! உங்களிடம் நன்றியுணர்வு மற்றும் கலப்படமற்றதன்மை இல்லை என்றால், நீங்கள் பொய்யர்களாக ஆகிவிடுவீர்கள்; மேலும், உங்களால் இறைவனிடத்தில் நேர்மையானவராக ஆக இயலாது. இவ்வாறான நிலையில் நன்றியுணர்வை விட்டுவிட்டு துரோகத்தின் வழியை மேற்கொள்பவர் எதிரியை விட முதலில் அழிவுக்கு ஆளாகிறார். இறைவனை

ஏமாற்ற முடியாது. மேலும், யாராலும் அவனை ஏமாற்ற இயலாது. எனவே நீங்கள் உண்மையான கலப்படமற்றதன்மை மற்றும் உண்மைத்துவத்தை உருவாக்குவது அவசியமாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்.188-190 வரை, 1984ஆம் ஆண்டு பதிப்பு)

பொறுமை மற்றும் துஆவின் மூலம் உண்மையான கலப்படமற்ற-தன்மை கிடைக்கிறது என்ற விஷயத்தையும் அன்னார் (அலை) விளக்கியுள்ளார்கள். எனவே இதைப் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள். மேலும், இதற்காக நிரந்தர தன்மையுடன் இறைவனுடைய சந்நிதியில் விழுந்து கிடப்பது அவசியம். எனவே நம்முடைய இனிவரும் ஒவ்வொரு நாளிலும் நன்றியுணர்வுடன் இறைவனுடனான தொடர்பை மேம்படுத்த முயற்சி செய்பவர்களாக நாம் இருக்க வேண்டும். தொழுகைகளின் பால் நிரந்தரமான கவனம், அவற்றை அழகிய முறையில் நிறைவேற்றுதல், திருக்குர்ஆனைப் படிப்பது, புரிவது, அதனுடைய போதனைகளின் படி அமல் செய்வது, ஒருவர் மற்றவருடைய உரிமைகளை நிறைவேற்றுவது மற்றும் ஏகத்துவத்தை நிலைபெறச் செய்வது போன்றவை நமது செயல் திட்டமாகும்.

உண்மையில், ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் ஒவ்வொரு செயலும் அசைவும் ஏகத்துவத்தை நிலை பெறச் செய்வதற்காக இருக்கிறது; இருக்கவும் வேண்டும். இதுவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய தோற்றத்தின் நோக்கமாக இருந்தது. மேலும், இவ்விஷயத்தை அன்னார் திரும்பத்திரும்ப வெளிப்படுத்தி இருந்தார்கள். எனவே இவ்விஷயத்தைப் புரிவது அவசியமாகும். இல்லை என்றால், வெறும் பைஅத் செய்வது மட்டும் எந்தப் பலனையும் அளிக்காது. இவ்விஷயத்தை பல இடங்களில் விரிவாக அன்னார் (அலை) கூறியுள்ளார்கள். உதாரணமாக ஓரிடத்தில் கூறுகிறார்கள் : எவர் பைஅத் செய்ததாகவும் ஈமான் கொண்டதாகவும் வாதிக்கின்றாரோ அவர் தன்னைத் தானே, 'நான் வெறும் சக்கை தானா அல்லது சத்தா' என்று பரிசோதித்துப் பார்க்க வேண்டும். சத்து உருவாகாத வரை ஈமான், நேசம், கட்டுப்படுதல், பைஅத் செய்தல், பற்றுறுதி கொள்ளுதல் இஸ்லாத்தின் சீடனாக உள்ளேன் ஆகிய இந்த அனைத்து விஷயங்களையும் வாதிப்பவர் தனது வாதத்தில் உண்மையானவர் அல்ல. நினைவிற் கொள்ளுங்கள். இது உண்மையான விஷயம் ஆகும். நேசிக்கிறேன் அல்லது ஈமான் கொண்டுள்ளேன், கட்டுப்படுகிறேன் அல்லது பைஅத் செய்துள்ளேன் ஆகிய இந்த அனைத்தும் வாதங்களும் அந்நிலையில் உண்மையான வாதங்கள் ஆக முடியாது.

நினைவிற் கொள்ளுங்கள்! அல்லாஹ்விடம் சத்து அல்லாமல் வெறும் சக்கைக்கு எந்த மதிப்பும் கிடையாது. நன்றாக நினைவிற் கொள்ளுங்கள்! மரணம் எப்போது வரும் என்பது தெரியாது. ஆனால், மரணம் நிச்சயம் வரும் என்பது உறுதியான விஷயம். எனவே ஒருபோதும் வெறும் வாதங்களே போதும் என கருதி மகிழ்ச்சி அடைந்து விடாதீர்கள். எப்பொழுது வரை மனிதன் தன்மீது பல மரணங்களை ஏற்படுத்திக் கொள்வதில்லையோ அப்போது வரை அது ஒருபோதும்! ஒருபோதும் பலன் அளிக்கக்கூடிய விஷயம் அல்ல. பல மாற்றங்கள் மற்றும் புரட்சிகளை கடந்துவராத வரை அவனால் மனிதத்தின் உண்மையான நோக்கத்தைப் பெற முடியாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்.167- 1984ஆம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

பாருங்கள்! உலகத்தின் நிலைமையைப் பாருங்கள். நமது கண்ணியத்திற்குரிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களோ எனது வாழ்வும் எனது மரணமும் எல்லாம் அல்லாஹ்வுக்காகவே ஆகும் என தமது செயலால் காட்டினார்கள். ஆனால் இப்போது உலகில் முஸ்லிம்கள் உள்ளனர். அவர்கள் யாரிடமாவது, நீ முஸ்லிமா என்று கேட்டால், அல்ஹம்து லில்லாஹ் என்று கூறுகிறார். எவருடைய கலிமாவை ஓதுகின்றாரோ அன்னாரின் வாழ்வின் அடிப்படை நோக்கமோ இறைவனுக்காக இருந்தது. ஆனால், ஒரு சாதாரண முஸ்லிம் மரண நேரம் நெருங்கும் வரை உலகிற்காக வாழ்கின்றார். மேலும், உலகிற்காகவே மரணிக்கின்றார். மரணம் வரும்போது அல்லாஹ் நினைவுக்கு வருகிறான். உலகமே அவருடைய நோக்கமாகவும், நேசத்திற்குரியதாகவும் குறிக்கோளாகவும் இருக்கிறது. பிறகு நான் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றுகிறேன் என அவரால் எப்படிக் கூற முடியும்? இது மிகவும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய விஷயமாகும். இதை மேலோட்டமாகக் கருதாதீர்கள். முஸ்லிம் ஆவது எளிமையானதல்ல.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றாத வரை உங்களிடத்தில் இஸ்லாத்தின் முன்மாதிரியை உருவாக்காத வரை நிம்மதியாக இருக்காதீர்கள். பின்பற்றாமல், முஸ்லிம் என்று நீங்கள் அழைக்கப்பட்டால், இது வெறும் சக்கையாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல், முஸ்லிம் என்று நீங்கள் அழைக்கப்பட்டால், இது ஒரு விஷயமல்ல. வெறும் சக்கைதான். பெயர் மற்றும் சக்கையை வைத்து மகிழ்ச்சி அடைவது அறிவாளியின் பணியல்ல. அன்னார் (அலை) ஓர் உதாரணத்தைக் கூறினார்கள் :

ஒரு யூதரிடம் ஒரு முஸ்லிம், 'நீ முஸ்லிம் ஆகிவிடு' என்று கூறினார். அதற்கு அவர் கூறினார் : நீ வெறும் பெயரில் மகிழ்ச்சி அடைகிறாய். முஸ்லிம் என்று கூறிக் கொள்வதில் நீ மகிழ்ச்சி அடைகிறாய். நான் எனது மகனுக்கு காலித் (நீண்ட காலம் வாழ்பவன்) என்று பெயர் வைத்தேன். மேலும், மாலைக்குள் அவனை அடக்கம் செய்துவிட்டு வந்துள்ளேன். அவன் நீண்ட காலம் வாழவில்லை. அவன் நீண்ட வாழ்நாளைப் பெறவில்லை என்று அந்த யூதர் கூறினார்.

எனவே, உண்மையைத் தேடுங்கள். வெறும் பெயர்களில் திருப்தி அடைந்து விடாதீர்கள். ஒரு மனிதன் மகத்துவமிக்க தூதர் (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சார்ந்தவர் என்று தன்னைக் கூறிக்கொண்டு, காஃபிர்களைப் போன்று வாழ்வைக் கழிப்பது எந்த அளவு வெட்கத்திற்குரிய விஷயம் ஆகும். நீங்கள் உங்கள் வாழ்க்கையில் ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைக் காட்டுங்கள். அந்த நிலையையே உருவாக்குங்கள். பாருங்கள்! அதே நிலை இல்லை என்றால், நீங்கள் ஷைத்தானைப் பின்பற்றுபவர்கள் ஆவீர்கள். அந்நிலையில் ஷைத்தானைப் பின்பற்றுபவர்களாக நீங்கள் ஆகிவிடுவீர்கள். அவனுக்குப் பின்னால் செல்லக்கூடியவர்களாக நீங்கள் ஆகிவிடுவீர்கள் என்று மிகப் பெரும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆக, இப்போது இந்த விஷயத்தை நன்றாகப் புரிய முடியும். அல்லாஹ்வின் நேசத்திற்குரியவர் ஆவது மனித வாழ்வின் நோக்கமும் குறிக்கோளுமாக இருக்க வேண்டும். ஏனெனில், அல்லாஹ்வின் நேசத்திற்குரியவர் ஆகாத வரை, இறைவனின் நேசம் கிடைக்காத வரை, வெற்றிகரமான வாழ்வை வாழ முடியாது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை உண்மையாகப் பின்பற்றாமல், அன்னாருக்குக் கட்டுப்படாமல், இந்த விஷயம் உருவாவதில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இஸ்லாம் என்றால் என்ன? என்று தமது செயலால் காட்டியிருக்கிறார்கள். எனவே, நீங்கள் அந்த இஸ்லாத்தை உங்களுக்குள் உருவாக்குங்கள். இவ்வாறு, நீங்கள் இறைவனுக்கு விருப்பமானவர்கள் ஆகிவிடலாம்.

(மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்.187-188, 1984ஆம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள் :

நினைவிற் கொள்ளுங்கள்! நமது ஜமாஅத், பொதுவாக உலகவாதிகள் வாழ்க்கையைக் கழிப்பது போன்று வாழ்வதற்காக அல்ல. எனவே, நீங்கள் நாவினால் மட்டும் நாங்கள் இந்த இயக்கத்தில் இருக்கிறோம் என்று கூறிவிட்டு, செயல்படுவதை அவசியத்தைப் புரியவில்லை என்றால், துர்பாக்கியமான முறையில், முஸ்லிம்களின் நிலை இவ்வாறு தான் உள்ளது. அவர்களிடம் நீங்கள் முஸ்லிம்களா என்று கேட்டால், ஆமாம்! அல்ஹம்துலில்லாஹ்! என்று கூறுகிறார்கள். ஆனால், தொழுவதில்லை. அல்லாஹ் கடமையாக்கிய விஷயங்களுக்கு கண்ணியம் அளிப்பதில்லை. எனவே, நீங்கள் நாவால் மட்டும் கூறிவிட்டு, செயலில் எதையும் செய்து காட்டாமல் இருப்பதை நான் விரும்பவில்லை. இது இயலாத தன்மையாகும். அல்லாஹ் இதை விரும்புவதில்லை. உலகின் இப்படிப்பட்ட நிலைமை தான் என்னை சீர்திருத்தத்திற்காக இறைவன் அனுப்ப வேண்டும் என்பதை எதிர்பார்த்தது.

எனவே இப்போது எவரேனும் என்னுடன் தொடர்பு கொண்ட பிறகும் தனது நிலையை சீர்திருத்தவில்லை என்றால், செயலின் ஆற்றல்களை அதிகரித்துக் கொள்ளவில்லை என்றால், மாறாக, நாவினால் கூறுவதை மட்டும் போதுமானதாகக் கருதுகிறார் என்றால், ஒருவகையில் அவர் தனது செயலால் எனது வருகையின் தேவையில்லை என்பதற்கு அழுத்தம் கொடுக்கிறார். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வருவதற்கான எந்தத் தேவையும் இருந்திருக்கவில்லை என்று தனது அமலால் அவர் கூறுகிறார். பிறகு எனது வருகை பயனற்றது என்பதை உங்களுடைய செயலால் நிரூபிக்க விரும்பினால் பிறகு என்னோடு தொடர்பு கொண்டிருப்பதன் அர்த்தம் என்ன? என்னோடு தொடர்பு கொண்டுள்ளீர்கள் என்றால், எனது நோக்கத்தையும் குறிக்கோளையும் நிறைவேற்றுங்கள். அது என்னவென்றால், இறைவனிடம் உங்களின் கலப்படமற்ற தன்மை மற்றும் நன்றியுணர்வைக் காட்டுங்கள். எவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனின்படி நடந்து காட்டினார்களோ, மேலும் சஹாபிகள் நடந்தார்களோ அவ்வாறு திருக்குர்ஆனின் போதனைகள்படி செயல்படுங்கள். திருக்குர்ஆன் சரியாக என்ன விரும்புகிறது? என்பதை அறியுங்கள். அதன்படி செயல்படுங்கள். நாவளவில் மட்டும் ஏற்றுக் கொண்டு விட்டு, செயலில் எந்த ஒளியும் மும்முரமும் காணப்படவில்லை என்றால் அது இறைவனிடம் போதுமானதல்ல.

நினைவிற் கொள்ளுங்கள். இறைவன் நிலைநாட்ட விரும்புகின்ற அந்த ஜமாஅத் செயல் இல்லாமல் உயிருடன் இருக்க முடியாது. இது எப்படிப்பட்ட மகத்தான ஜமாஅத் என்றால், இதற்கான ஆயத்தப்படுத்துதல் ஹஸ்ரத் ஆதமின் காலம் முதலே ஆரம்பிக்கப்பட்டது. இந்த அழைப்பைப் பற்றி தெரிவிக்காத எந்த நபியும் உலகில் வரவில்லை. எனவே இதற்கு மதிப்பளியுங்கள். இதற்கு மதிப்பளித்தல் என்பது இதுதான். அதாவது, உண்மையை உடைய கூட்டம் நீங்கள் தான் என்பதை உங்கள் செயலால் நிரூபித்துக் காட்டுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்.370-371, 1984ஆம் ஆண்டு பதிப்பு)

எனவே நாம் இதை நிரூபிக்க வேண்டும். ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் முன்னறிவித்திருந்த அந்த மஸீஹ் மற்றும் மஹ்தி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸிஹ் (அலை) அவர்கள்தான் என்ற உறுதியான நம்பிக்கையுடன் நாம் பைஅத் செய்துள்ளோம் என்றால், நாம் நம்மில் ஒரு தூய்மையான மாற்றத்தை கொண்டுவரவேண்டும். ஒரு புரட்சியை உருவாக்க வேண்டும். உலகிற்கு ஒரு முன்மாதிரியாக திகழ வேண்டும். இறைவனுக்கான உரிமைகள் மற்றும் படைப்பினங்களுக்கான உரிமைகள் செலுத்தும் தரத்தை நிலைநிறுத்த வேண்டும். ரமலானில் நாம் பெற்ற தர்பிய்யத்தை வருடத்தில் மீதமுள்ள பகுதிகளிலும், மாதங்களிலும் தொடரச் செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய வார்த்தைகளில் உங்கள் முன் நான் வைத்த இந்த செயல் திட்டத்தின்படி செயல்பட முழு முயற்சியை மேற்கொள்ள வேண்டும். நம்முடைய தொழுகைகளை அழகிய முறையில் நிறைவேற்ற வேண்டும். திருக்குர்ஆன்படி செயல்பட வேண்டும். ஒருவர் மற்றவரின் உரிமைகளை செலுத்த வேண்டும். ஏகத்துவத்தை நிலைநாட்ட, அனைத்து தியாகங்களையும் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் நாம் பைஅத்திற்கான உரிமையை நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்போம். அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

துஆக்களும் செய்யுங்கள். உலக நிலைமைகள் சரியாக வேண்டும் என்று உலகிற்காகவும் துஆக்கள் செய்யுங்கள். பரஸ்பர பகைமை நிலவுகிறது. ஒரு நாடு மற்றொரு நாட்டின் மீது தாக்குதல்கள் தொடர்கின்றன. அவர்கள் அறிவு பெற வேண்டும். இந்த விஷயங்களில் இருந்து தவிர்ந்திருக்க வேண்டும். இல்லை என்றால், உலகம் அதிகமாக அழிவின் பக்கம் செல்கிறது. தன்னை படைத்த இறைவனை அடையாளம் கண்டு கொள்ளும்போது தான் இவர்களால் இதிலிருந்து வெளிவர இயலும். அதேபோன்று இறைவழியில் சிறை சென்றவர் உள்ளனர். இறைவழியில் சிறை சென்ற அஹ்மதிகளுக்காக துஆ செய்யுங்கள். பாகிஸ்தானில் உள்ள அஹ்மதிகளுடைய நிலைமைகளுக்காக துஆ செய்யுங்கள்.

உலகில் இன்னும் சில நாடுகளின் இதுபோன்ற நிலைமைகளுக்காகவும் துஆ செய்யுங்கள். ஆப்கானிஸ்தானில் இறைவழியில் சிறை சென்றவர்கள் உள்ளனர். அவர்களுக்காக துஆ செய்யுங்கள். அல்ஜீரியாவில் இறைவழியில் சிறை சென்றவர்கள் உள்ளனர். அவர்களுக்காக துஆ செய்யுங்கள். பாகிஸ்தானின் சட்டங்களின் காரணமாக எல்லா இடத்திலும் - பிறகு இந்த மௌலவிகள் மற்றும் பொதுமக்களின் மீதான பயத்தினால் நீதிபதிகளுக்கு சரியான தீர்ப்பு வழங்க நற்பேறு கிடைப்பதில்லை. அல்லாஹ் இந்த நிலைமைகளை சீர் ஆக்குவானாக! பாகிஸ்தானிலும் அஹ்மதிகள் சுதந்திரமாக வசிக்கட்டுமாக!

தொழுகைக்கு பிறகு நான் இங்கு வந்துள்ள ஒரு ஜனாஸாவுக்கு ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். அது மதிப்பிற்குரிய அப்துல் பாகி அஷ்ரஃப் சாஹிப் அவர்களுடையது ஆகும். அஷ்ஷிர்கத்துல் இஸ்லாமியா யூகேவின் சேர்மனாக இருந்தார்கள். அன்னார் ஃபய்ஸலாபாத்தை சேர்ந்த டாக்டர் அப்துல் ஹமீத் சாஹிப் அவர்களுடைய மகனாவார்கள். 88 வயதில் ஏப்ரல் 27 அன்று அன்னார் வஃபாத் ஆகிவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய சஹாபியான ஹஸ்ரத் மியான் சிராக்குத்தீன் சாஹிப் (ரலி) அவர்களுடைய கொள்ளுப் பேரராவார்கள். ஈஸாவின் களிம்பு ஹஸ்ரத் முஹம்மத் ஹுஸைன் சாஹிப் (ரலி) மற்றும் ஒரு சமயம் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவூத் அவர்களுடைய பிரைவேட் செக்ரட்டரியாக இருந்த மியான் முஹம்மது யூசுப் சாஹிப் அவர்களின் குடும்பத்தை சேர்ந்தவர். அஷ்ரஃப் பாக்கீ சாஹிப் அவர்கள் 1955இல் இங்கிலாந்து வந்தார்கள். இங்கு எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங் முடித்தார்கள். தம் துணைவியாருடன் ஃபஸல் பள்ளிவாசலில் தங்கி வந்தார்கள். பிறகு 1963இல் வேலை கிடைத்து, சவுதி அரேபியா சென்று விட்டார்கள்.

1972 வரை அங்கேயே இருந்தார்கள். சவுதி அரேபியாவில் தங்கி இருந்த காலகட்டத்தில் ஹஜ் மற்றும் உம்ராவிற்காக வருகின்ற அஹ்மதிகளுக்கு சேவை செய்யும் நற்பாக்கியமும் இவர்களுக்குக் கிடைத்தது. வருகை புரிந்தவர்களில் சில சஹாபிகளும் இருந்தார்கள். சவூதி அரேபியாவில் வசித்து வந்த காலகட்டத்தில், அஹ்மதியாக இருந்த காரணத்திற்காக, இறைவழியில் சிறைசெல்வதற்கான நற்பாக்கியமும்

அன்னாருக்கு கிடைத்தது. இவர்களுக்கு அரசாங்கம் சார்பாக, அஹ்மதியத்தை நிராகரித்தால் தங்களுக்கு விடுதலை கிடைத்துவிடும் என்ற சலுகையும் கிடைத்தது. அன்னார் கைதியாக இருப்பதை பொறுத்துக் கொண்டார்கள். ஆனால் அஹ்மதிய்யத்தை விட மறுத்து விட்டார்கள்.

எவ்வாறு இருப்பினும் 1972இல் அன்னார் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டு விட்டார்கள். பிறகு அன்னார் யூ.கே. வந்துவிட்டார்கள். இங்கு வந்ததற்குப் பிறகு தம்முடைய இறுதி மூச்சுவரை ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெற்றார்கள். பல பொறுப்புகளில் தொண்டாற்றி-னார்கள். ஹஸ்ரத் நான்காவது கலிஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஹிஜ்ரத் செய்த போது, அவர்களை அழைத்துவர இவர்கள் ஹாலந்தும் சென்றார்கள். பிறகு ஹுஸுர் (ரஹி) அவர்கள் அனனாருடன் தான் ஹாலந்திலிருந்து யூ.கே. வந்தார்கள். யூகேவில் ஜாய்தாத் செயலாளராக தொண்டாற்றுவதற்கு இவர்களுக்கு நல்வாய்ப்பு கிடைத்தது. இஸ்லாமாபாத்தில் வாங்கப்பட்ட நிலத்திலும் இவர்களுடைய பங்களிப்பு நிறைய இருந்தது. யூகேவின் நாயிப் அமீராகவும் தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெற்றார்கள். யூகேவின் ஜல்சா சாலானா உயர் அதிகாரியாக, ஆப்ரிக்கா டிரேட் உடைய சேர்மன் ஆகவும், ஷிர்க்கத்துல் இஸ்லாமிய்யாவின் சேர்மன் ஆகவும், நீண்ட காலம் தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெற்றார்கள்.

பின்விட்டுச் சென்றவர்களில் 2 மகன்களும், 2 மகள்களும் உள்ளனர். இவர்களின் ஒரு மகன் நபீல் அஷ்ரஃப், இங்கு ஜமாஅத்திற்கு நன்றாக சேவை செய்கின்றார்கள். மர்ஹூமை குறித்து ஊழியர்களின் அலுவலகத்தின் முன்னாள் பணியாளர் முபஷ்ஷிர் ஸஃபர் சாஹிப் கூறுகிறார்கள் : ஜமாஅத்திடமிருந்து எந்த ஒரு ஊதியமும் பெறாமல் தன்னார்வத் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு அன்னாருக்கு கிடைத்துக் கொண்டிருந்தது. ஆனால் மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் பணியாற்றி வந்தார்கள். நேரத்தை மிகவும் பேணி வந்தார்கள். உடல் பலவீனமாக இருந்தும்கூட, நோயைப் பொருட்படுத்தாமல் தினமும் எட்டு பத்து மணி நேரம் அலுவலகத்தில் வந்து அமர்வார்கள்.

இரண்டாவது, தம்முடைய பணியை தாமே செய்யும் பழக்கம் அன்னாருக்கு இருந்தது. டீ போடுவதாக இருந்தாலும் தாமே போட முயற்சி செய்வார்கள். யாராவது அன்னாருக்கு டீ போட்டு கொடுத்தாலும் தம்முடைய கப்பை மற்றவரை கழுவ விட மாட்டார்கள். தம்முடைய பாத்திரத்தை தாமே கழுவி வந்தார்கள். சில சமயங்கள் சில நபர்கள் மதிய உணவிற்கு பிறகு மேசை மீது சில பாத்திரங்களை விட்டுச் செல்வார்கள். அன்னார் யாரிடமும் கூறாமல் தாமே அதை அகற்றி மேசையை சுத்தம் செய்து விடுவார்கள். சில சமயங்களில் கழிவறையை சுத்தம் செய்பவர் வரவில்லை என்றால், தேவை ஏற்படும் போது, தாமே கழிவறையை சுத்தம் செய்து வந்தார்கள்.

மிகவும் பணிவுடன் மிகவும் கடின உழைப்புடன் பணியாற்றிய அதிகாரியாக அன்னார் இருந்தார்கள். ஞாபகசக்தி மிக நன்றாக இருந்தது. ஜமாஅத்தினுடைய பணத்தையும், கிடைக்கப் பெற்ற அனைத்து பொறுப்புகளையும் இறுதி நேரம் வரை மிகவும் அழகிய முறையில் நிறைவேற்றி வந்தார்கள். தொழுகையை மிகவும் பேணக்கூடியவராகவும் ஜமாஅத்தாக தொழக் கூடியவராகவும் கிலாஃபத்திற்கு மிகுந்த கண்ணியம் அளிக்கக் கூடியவராகவும் இருந்தார்கள். கிலாஃபத் சார்பாக கிடைக்கப்பெறும் வழிகாட்டல்கள் இவர்களது சுய கருத்துக்கு மாற்றமானதாக இருந்தாலும் கூட அன்னார் உடனடியாக முழுமனதுடன் மகிழ்ச்சியுடன் தம்முடைய கருத்தையும் ஆலோசனையையும் மறந்து விட்டு, அதை ஏற்றுக் கொள்வார்கள்.

வதூத் மலிக் சாஹிப் கூறுகிறார்கள்: நான் அவர்களைவிட மிகவும் சிறியவனாக இருந்தேன். ஆனால் அவ்வாறு இருந்தும்கூட, அவர்களிடம் செல்லும் போதெல்லாம் மிகவும் கருணையுடன் வழிகாட்டினார்கள். மிகவும் பணிவுடன் நடந்து கொள்வார்கள். நான் வயதில் சிறியவன் ஆனால் அவருக்கு ஒப்பான வயதுடையவன் என்பது போல் என்னிடம் நடந்து கொண்டார்கள். முனீருத்தீன் ஷம்ஸ் சாஹிப் அவர்களும் இவர்களைப் பற்றி எழுதியுள்ளார்கள் : ஹஸ்ரத் நான்காவது கலிஃபத்துல் மஸிஹ் (ரஹி) அவர்கள் இஸ்லாமாபாத் வீடுகளின் தேவைகளை அறியும் பொறுப்பை ஆரம்பத்தில் அன்னாரிடம் ஒப்படைத்து இருந்தார்கள். அதை அன்னார் மிகவும் அழகிய முறையில் நிறைவேற்றினார்கள். இதைப் போன்றே அஷ்ஷிர்க்கத்துல் இஸ்லாமிய உடைய பொறுப்புகளையும் மிகவும் அழகிய முறையில் இறுதி மூச்சு வரை நிறைவேற்றி வந்தார்கள். MTA-வோடும் இவர்களுக்கு தொடர்பு இருந்தது. MTA-வின் பணிகளிலும், பொருள் விவகாரங்களில் அல்லது Contract போன்றவற்றிலும் அன்னாரின் பங்களிப்பு அதிகமாக உள்ளது.

அல்லாஹ் அன்னாருக்கு பாவமன்னிப்பு வழங்கி, கருணையுடனும் நடந்து கொள்வானாக! அந்தஸ்தை உயர்த்துவானாக! இவர்களுடைய பிள்ளைகளுக்கும் மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! தூய உள்ளத்துடனும் நன்றியுணர்வுடனும் ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் இணைத்து வைப்பானாக.

நான் கூறியது போன்று, ஜனாஸா வந்துள்ளது. தொழுகைக்குப் பிறகு நான் வெளியே சென்று ஜனாஸா தொழவைப்பேன்.

தமிழாக்கம் :

மவ்லவி அதாவுல் முக்னி

* * * * * * *

## 127 வது காதியான் ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 127 வது காதியான் ஆண்டு மாநாட்டினை 23,24,25 டிசம்பர் 2022 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் இப்போதிருந்தே துஆக்கள் செய்தவாறு இந்த அருளுக்குரிய ஜல்ஸாவில் பங்கு பெறும் நிய்யத்துடன் ஏற்பாடுகளை தொடங்கி விடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறுவதற்கான நற்பேறு வழங்குவானாக. மேலும் இந்த ஜல்ஸாவை எல்லா வகையிலும் வெற்றிகரமாக ஆக்குவானாக. மேலும் அது அருளுக்குரியதாக அமைவதற்கும், நல்ல ஆன்மாக்களின் நேர்வழிக்கு காரணியாக அமைவதற்கும் தொடர்ந்து துஆ செய்து வாருங்கள்.

(நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸியா, காதியான்)

## வருடாந்திர இஜ்திமாக்கள் 2022

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதியா, மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், மஜ்லிஸ் லஜ்னா இமாயில்லாஹ் ஆகிய கிளை அமைப்புகளுக்கான இஜ்திமாக்களை 21, 22, 23 அக்டோபர் 2022 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு பரிவுகூர்ந்து ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இதற்கேற்ப துஆக்கள் செய்தவாறு இந்த இஜ்திமாக்களில் பங்கு பெறுவதற்கு எல்லா முயற்சிகளையும் செய்யுங்கள்.

(சதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதியா, பாரத்)


## நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்

∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 02 June 2022 Issue No. 22

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

(மல்ஃபூஸாத்... முதல் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றதென்றால் இறைவனின் கோபம் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே செல்லும். மேலும் இறைநெருக்கத்தை பெறுவதற்கு பகரமாக நாளுக்கு நாள் அல்லாஹ்விடமிருந்து தொலைவில் விலகி கொண்டே செல்கின்றார். அதேநேரம் ஃபனா எனும் (அர்ப்பணிப்பின்) நிலையில் இருக்கும் நபர் மேலும் இறை சன்னிதானத்தில் வீழ்ந்து கிடக்கும் அந்த நபர் ரூபிபிய்யத்தின் (எனும் படைத்து பரிபாலிக்கும் பண்பின்) மடியில் பராமரிக்கப்படுகின்றார். மேலும் இறைவனின் கருணை அவரை மூடிக் கொள்கிறது. எந்த அளவுக்கென்றால் அவர் பேசுவது இறைவன் பேசுவதாக அமைகின்றது. அவரின் நண்பன் இறைவனின் நண்பனாகவும் அவரது எதிரி இறைவனின் எதிரியாகவும் ஆகிவிடுகின்றார். எனவே இறைவனின் எதிரியாக இருக்கும் ஒரு நபர் எப்படி முழுமையான நம்பிக்கையாளராக இருக்க முடியும்.? இவ்வாறு அந்த நபரின் ஈமான் வீணாகி விடுகின்றது. மேலும் அது அவரை இறை கோபத்திற்கு ஆளான கூட்டத்தைச் சார்ந்தவராக ஆக்கிவிடுகின்றது. இறைவன் புறமிருந்து வருபவர்களையும் அல்லாஹ்வின் நேசர்களையும் எதிர்ப்பதும் அவர்களுக்கு தொல்லைகள் கொடுப்பதும் ஒருபோதும் நல்ல கனிகளைத் தராது. அவர்களுக்கு தொல்லை கொடுத்து துன்பம் கொடுத்து தன்னால் நிம்மதி அடைந்துவிட முடியும் என்று கருதுகின்ற நபர் பெரும் தவறிழைக்கின்றார். மேலும் (அவரது) மனம் அவரை ஏமாற்றுகின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 314.காதியான் வெளியீடு 2018)

* * *

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A. Basheer Ahmad
(Sec. Waqf-e-Jadid, Melapalayam)

(தஃப்ஸீரே கபீர்... முதல் பக்கத் தொடர்ச்சி)

மேலும் உனது இருப்பை அதிக அதிகமாக வெளிப்படுத்துவாயாக என்று அவர் துஆ செய்கின்றார். எனவே அந்நிலையில் இஃபிர்லி (என்னை மன்னிப்பாயாக) என்பதன் பொருள் இவ்வாறாக அமையும். அதாவது இறைவா! எனது அன்பினை வைத்து வேண்டுகிறேன். நீ உனது திரையை என் மீது இடுவாயாக. அதாவது எனது இருப்பை அழித்துவிட்டு உனது இருப்பு என் மூலமாக வெளிப்படட்டுமாக. அடியார் மூலமாக எந்த அளவிற்கு அதிகமாக அல்லாஹ்வின் இருப்பு வெளிப்படுமோ அதே அளவில் அடியார் தனது நோக்கங்களில் வெற்றி பெறுவார்.

ஆயினும் மற்றவர்களுக்காக அந்த சொல் வந்தால் அப்போது அவர்களின் தகுதிக்கேற்ப இந்த சொல் பயன்படும்.எனவே அந்நிலையில் அதன் பொருள் இவ்வாறு அமையும். அதாவது மேன்மைகளை அடைவதிலிருந்து இழப்பிற்குரியவராக ஆக்குகின்ற பலவீனங்களிலிருந்து என்னை பாதுகாப்பாயாக என்று பொருள்படும். இடைப்பட்ட நம்பிக்கையாளருக்காக அந்த சொல் பயன்படும்போது எனது தவறுகளை மறைத்து உயர் முன்னேற்றங்களுக்கு எனக்கு நற்பேறு வழங்குவாயாக என்று பொருள்படும். சாதாரண நம்பிக்கையாளர் இந்த சொல்லை பயன்படுத்தும்போது எனது பாதத்தை ஈமானில் உறுதியுடன் நிலைபெற செய்வாயாக. எனது பாவம் என்னை மூழ்கடித்துவிடக் கூடாது என்று பொருள் அமையும். உண்மையை தேடும் ஒருவர் இந்த சொல்லை பயன்படுத்தும்போது அதன் பொருள் இவ்வாறு அமையும். அதாவது நான் நேர்வழி பெறுவதிலிருந்து எனது பாவம் என்னை இழப்பிற்குரியவனாக ஆக்கிவிடக் கூடாது. எனவே எனது பாவங்களை மன்னிப்பாயாக என்று பொருள் அமையும். ஜப்பார் என்ற சொல் அல்லாஹ்விற்காக வரும்போது அதன் பொருள் சீர்திருத்தம் செய்பவர் என்று பொருள்படும். ஆனால் அதே சொல் மனிதனுக்காக வரும்போது அதன் பொருள் கட்டுப்படாதவர் மற்றும் சட்டத்தை மீறுபவர் என்பதாகும்.அதுபோன்றே பல்வேறு சந்தர்ப்பங்களை பொருத்து மேற்கண்ட சொல்லின் பொருள் அமையும். நினைவிற்கொள்ளவேண்டும். அல்லாஹ் தனது நபிமார்களைப் பற்றி

اَللّٰہُ یَجۡتَبِیۡ مِنۡ رُّسُلِہٖ

என்று கூறுகின்றான். எனவே அல்லாஹ் அவர்களை தேர்ந்தெடுக்கும்போது பின்னர் அவர்களிடம் பாவம் எங்கிருந்து வரமுடியும்? அவர் உலகிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு இறைவனுக்கு அருகில் அமர்த்தப்பட்டுவிட்டப் பிறகு அவர்களுக்கு அருகில் ஷய்த்தான் எப்படி வருவான்?ஷய்த்தான் இறைவனின் பெயரை கேட்டவுடனேயே ஓடிவிடுகிறான். இதே போன்று மற்றோரிடத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :-

اِنَّ عِبَادِیۡ لَیۡسَ لَکَ عَلَیۡہِمۡ سُلۡطٰنٌ

எனது அடியார் மீது நிச்சயமாக உனக்கு எந்த ஆதிக்கமும் இருக்காது.எனவே குறைந்த அந்தஸ்த்தில் உள்ள அடியார் கூட ஷய்த்தானின் ஆதிக்கத்திலிருந்து பாதுகாப்பாக இருப்பது சட்டமாக இருக்கும்போது அல்லாஹ்வின் சிறப்பான பாதுகாப்பில் இருக்கும் நபிமார்களுக்கு அருகில் ஷய்த்தான் எப்படி செல்ல முடியும்?

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 3, பக்கம் 489, காதியான் வெளியீடு 2010)

* * *

**O.A.N. Doors & Steels**



O.A. NIJAM
99947 57172
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic }**
**Tirunelveli-627005**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad